பக்கங்கள்: 16

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 தை 14 சனிக்கிழமை 28.01.2023 கதிர் 81

### இது ரகசியம் அல்ல!

நாடாளுமன்றத்தின் இரண்டாவது அமர்வை ஒததிவைக்கும் அறிவிப்பு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் விடுக்கப்பட்டது. இலங்கையின் மரபுப்படி நாடாளுமன்றம் ஒவ்வொரு தடவை கூடும்போதும் நாட்டின் ☞ 2

## விமல் வீரவன்ஸ விடும் புதுக் கதை

# 13 முழுதாக வந்தால் தமிழீழம் மலருமாம்



அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தினால் நாடு பிளவுபடும். தமிழீழம் மலர அது வழிவகுக்கும். நாடெங்கும் மீண்டும் இரத்த ஆறு ஓடும்.

- இவ்வாறு உத்தர லங்கா சபாவவின் தலைவரும் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவருமான விமல் வீரவன்ஸ எச்சரிக்கை விடுத்தார். ☞ 2

## கொல்லப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி வேண்டி

# 'கறுப்பு ஜனவரி' போராட்டம் கொழும்பு, மட்டக்களப்பில்





படுகொலை செய்யப்பட்ட, தாக்குதல்களுக்கு உள்ளாக்கப்பட்ட மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதியை வழங்குமாறு வலியுறுத்தும் 'கறுப்பு ஜனவரி' கவனயீர்ப்புப் போராட்டம் நேற்று மாலை கொழும்பு விகாரமகாதேவி பூங்காவுக்கு அருகாமையில் நடைபெற்றது.

இலங்கை உழைக்கும் ஊடகவியலாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட ☞ 2

# மைத்திரியை பிரதிவாதி கூண்டில் ஏற்றிய கொழும்பு நீதிவான் மன்று

## மார்ச் 17 வரை வழக்கு ஒத்திவைப்பு

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பான விசாரணை இன்று இடம்பெற்ற வேளையில், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பிரதிவாதிக் கூண்டில் ஏற மறுத்ததை ☞ 2

# வடக்கு - கிழக்கிலிருந்து படையினரை அகற்றாதீர்

## ஜனாதிபதிக்கு மகாநாயக்கர்கள் அவசர கடிதம்

நாட்டின் வடக்கு, கிழக்கு மற்றும் ஏனைய பிரதேசங்களில் உள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பௌத்த மத ஸ்தலங்களின் அபிவிருத்தி மற்றும் பாதுகாப்புக்காக நியமிக்கப்பட்டுள்ள பாதுகாப்புப் படையினரை அப்புறப்படுத்த வேண்டாம் ☞ 2

# கரைத்துரைப்பற்று வேட்புமனு நிராகரிப்பை எதிர்த்து வழக்கு

## தமிழ் அரசுக் கட்சி உயர் நீதிமன்றில் தாக்கல்

(ந.லோகதயாளன்)
யாழ்ப்பாணம், ஜன.27

முல்லைத்தீவு மாவட்டம் கரைத்துரைப்பற்று பிரதேச சபையின் தமிழ் அரசுக் கட்சியின் வேட்பு மனு நிராகரிக்கப்பட்டதை எதிர்த்து உயர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மார்ச் 9ஆம் நாள் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ள உள்ளூர் அதிகார சபைகளிற்கான தேர்தலுக்கான வேட்புமனுத் ☞ 9

## சொந்த ஊழியரால்

# களவாடப்பட்ட அடகு நகைகளுக்கு தீர்வு 10 ஆண்டுகளின் பின்பே வங்கி முயற்சி

## முதல் தடவையாக பாதிக்கப்பட்டோரை சந்தித்தார் மக்கள் வங்கி உயரதிகாரி



மக்கள் வங்கியின் திருநெல்வேலி சேவை நிலையத்தில் அடகு வைக்கப்பட்ட நகைகளை அங்கு பணியாற்றிய அதிகாரி ஒருவர் கையாடிச் சென்றதன் காரணமாகத் தமது நகைகளை மீட்க முடியாமல் பாதிக்கப்பட்டிருக்கும் வாடிக்கையாளர்களுக்கு மிக விரைவில் உரிய தீர்வு பெற்றுத் தரப்படும் என மக்கள் வங்கியின் பிரதிப் ☞ 9

# செல்லப் பிராணிக்காக உயிரை விட்ட இளைஞன்

## கிளிநொச்சியில் நேற்றுப் பரிதாபம்



செல்லப்பிராணியை மீட்க கிணற்றில் இறங்கிய இளைஞர் சடலமாக மீட்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் கிளிநொச்சி – உதயநகர் பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்றது.

24 வயதுடைய விவேகானந்தன் வேணிலவன் ☞ 9

# நாடாளுமன்றம் ஒத்திவைப்பு; பெப்ரவரி 8இல் மீளவும் கூடும்

## ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடனத்துடன்

ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத் தொடர் நேற்று நள்ளிரவுடன் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. அதற்கான வர்த்தமானி அறிவித்தல் ஜனாதிபதியின் பிரகடனத்துக்கமைய ஜனாதிபதிய செயலாளர் சமன் ஏக்கநாயக்கவால் வெளியிடப்பட்டுள்ளது.

அதற்கமைய ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் நான்காவது கூட்டத்தொடர் எதிர்வரும் பெப்ரவரி 8 ஆம் திகதி காலை 10 மணிக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் ஆரம்பித்து வைக்கப்படும்.

இந்தக் கூட்டத்தொடர் முடிவடைந்து புதிய கூட்டத்தொடர் ஆரம்பமாகும் சந்தர்ப்பத்தில் சம்பிரதாயப்படி ☞ 9

# கூலிப் படையின் மற்றொரு நபரும் கைது

வட்டிப் பணத்தைப் பெறுவதற்காக கடன் வாங்கியவர்களைத்தாக்கிய கூலிப்படையைச் சேர்ந்த மற்றுமொருவரையும் பொலிஸார்கைதுசெய்துள்ளனர்.

கடன் வாங்கியவர்கள் வட்டி கட்டத்தாமதமாகியதை அடுத்து அவர்களிடமிருந்து பணத்தை வசூலிக்க அவர்களை கடுமையாகத் தாக்கி, காயப்படுத்தி, மானபங்கப்படுத்திய ☞ 9

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவரான ஜனாதிபதி நாடாளுமன்றத்தில் கொள்கை விளக்க உரையாற்றுவார். ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் ரணில் ஏற்கனவே ஒரு தடவை இவ்வாறு கொள்கை விளக்க உரையாற்றியிருக்கிறார்.

இப்போது மீண்டும் ஒரு கொள்கை விளக்க உரையாற்றுவதற்கு வசதியாகவே நாடாளுமன்றத்தை ஒத்திவைத்திருக்கிறார். அது மீண்டும் 8ஆம் திகதி கூடும்போது அவர் ஒரு கொள்கை விளக்க உரையாற்றுவார். அடுத்த 25 ஆண்டுகளுக்கான அரசின் திட்டங்கள் குறித்ததாக அது இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற சர்வகட்சிக் கூட்டத்தில் அவர் ஒரு விடயத்தைக் குறிப்பிட்டிருந்தார். அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் 8ஆம் திகதி தான் நாடாளுமன்றத்திற்கு அறிவிப்பேன் என்று தெரிவித்திருந்தார். நாடாளுமன்றத்தை ஒத்திவைத்து அதில் தனது கொள்கை விளக்க உரையை நிகழ்த்தப்போவதை மனதில் வைத்தே அவர் இதனைத் தெரிவித்திருக்கிறார்.

தமிழர்களுக்குவாக்குறுதியளித்தபடி அவர் சுதந்திர தினத்திற்கு முன்பாக எதையும் செய்யப்போவதுமில்லை, சுதந்திர தினத்தில் தீர்வு குறித்து அறிவிக்கப்போவதுமில்லை. 8ஆம் திகதிய அவரது உரையில் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கான அவரது யோசனைகளை முன்வைக்கக்கூடும். அந்த உரை இலங்கையின் சுதந்திர தின நூற்றாண்டை நோக்கிய அடுத்த 25 வருடங்களுக்கானதிட்டமிடல்கொள்கை விளக்க உரை எனில், இன்னும் கால் நூற்றாண்டுகளுக்கு 13ஐ முழுமையாக நிறைவேற்ற மட்டுமே தமிழர்கள் போராடவேண்டியிருக்கும் போல் உள்ளது. அதற்கு அப்பால் கிடைப்பதற்கும் பெறுவதற்கும் ஏதுமிருப்பதாகத் தெரியவில்லை.

நேற்றுமுன்தினம்சர்வகட்சிக்கூட்டத்தில் ரணில் மற்றொன்றையும் தெரிவித்திருக்கிறார்.

சமஷ்டியைத் தான் எதிர்க்கிறார் என்றும் ஒற்றையாட்சியின் கீழ் அதிகாரங்களைப் பகிர்ந்துகொள்வதற்கு தான் தயார் என்றும் வெளிப்படையாகத் தெரிவித்திருக்கிறார். இன்றல்ல என்றுமே அவரது திட்டம் அதுதான். அதைப் புரிந்துகொள்ள 2015இல் நல்லாட்சி என்ற பெயரில் ஆட்சிக்கு வந்த மைத்திரி – ரணில் கூட்டணியின் காலத்தில் நடந்ததை வாசகர்களுக்கு நினைவுபடுத்த வேண்டியிருக்கும்.

புதிய அரசமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கான ஒரு நாடகம் அப்போது அரங்கேற்றப்பட்டது. முழு நாடாளுமன்றமும் அரசமைப்புச் சபையாக மாற்றப்பட்டு புதிய அரசமைப்புத் தொடர்பான கலந்துரையாடல்கள் நடந்தன. அதற்கு ஆலோசனைகள் பரிந்துரைகள் வழங்குவதற்கென தொழில்நுட்பக் குழு ஒன்றும் கூட நியமிக்கப்பட்டது.

தயாரிக்கப்பட்ட புதிய அரசமைப்புக்கான வரைவில் இலங்கையின் ஆட்சித்தன்மை 'ஏக்கிய இராஜ்ஜிய' என்று இருந்தது. இது ஒற்றையாட்சியையே குறிக்கின்றது என்று அப்போது ஊடகங்களும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிரான மாற்றுக் கட்சிகளும் வாதிட்டன. ஆனால், அந்தச் சிங்களச் சொல்லின் சரியான தமிழ் அர்த்தம் "ஒருமித்த நாடு" என்று தமிழத் தலைவர்களால் விளக்கம் சொல்லப்பட்டது.

இது தொடர்பில் அன்று ஊடகங்களில் கடுமையான விவாதங்கள் இடம்பெற்றன. ஏக்கிய இராஜ்ஜியம் என்பது ஒற்றையாட்சியைக் குறிப்பதல்ல என்பதால் அது புதிய அரசமைப்பில் ஒருமித்த நாடு என்றே தமிழில் குறிப்பிடப்படும் என்றும் ஒரு விளக்கம் சொல்லப்பட்டது. இது சிங்களவர்களுக்கு ஒரு மாதிரியும் தமிழர்களுக்கு மற்றொரு மாதிரியும் காட்டும் ஏமாற்று வித்தை என்று அப்போதே கடும் விமர்சனங்கள் எழுந்தன. ஆனால், அது ஒற்றையாட்சியைக் குறிப்பதல்ல என்று அன்று ரணில் விக்கிரமசிங்கவுக்காக வாதிட்ட தமிழர்களில் முக்கியமானவர் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்.

இன்று அவருக்கும் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையிலான வெளிப்படையான அரசியல் உறவு சுமூகமாக இல்லை என்று தோன்றினாலும் அன்று ரணிலின் அந்த முயற்சிகளுக்கு உற்ற துணையாக இருப்பதில் அவர் அதிக அக்கறையும் முயற்சியும் காட்டியிருந்தார். இன்று சமஷ்டிக்குத் தான் ஆதரவில்லை என்பதை வெளிப்படையாகவே தெரிவித்து அவரைப் போன்றுதனக்காக நின்றவர்களையெல்லாம் நட்டாற்றில் கைவிட்டுவிட்டார் ரணில்.

இதே ரணில் விக்கரமசிங்கதான் சமஷ்டியையும் தாண்டிய உள்ளக சுயநிர்ணய அடிப்படையிலான தீர்வு ஒன்றுக்கு நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் விடுதலைப் புலிகளுக்கு இணக்கம் தெரிவித்தவர். ஆனால் புலிகளின் தலைமைதான் இதயசுத்தியோடு அமைதிப் பேச்சுக்களில் ஈடுபடவில்லை என்று பிரச்சாரம் செய்யப்பட்டது. உண்மையில் யார் இதயசுத்தியோடு இல்லாம் பேச்சில் ஈடுபட்டார்கள் என்பதை வாசகர்களாகிய நீங்களே தீர்மானித்துக்கொள்ளுங்கள்.

- இடிமின்னல் -

## 13 முழுதாக வந்தால் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

'13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதால் நாடு பிளவுபடாது. எனவே, இந்தத்திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும். அப்படிச்செய்யாமல் இருக்க வேண்டுமானால் யாராவது நாடாளுமன்றத்தில் 22ஆவது திருத்தத்தைக் கொண்டு வந்து 13ஆவது திருத்தத்தை இல்லாமல் செய்யவேண்டும்' என்று நேற்றுமுன்தினம் நடைபெற்ற சர்வகட்சிக் கூட்டத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார். இந்த நிலையில், இந்தக் கூட்டத்தைப் புறக்கணித்திருந்த உத்தரலங்கா சபாவின் தலைவர் விமல் வீரவன்சவிடம் ஜனாதிபதியின் மேற்படி கருத்து தொடர்பில் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப் படுத்தினால் நாடு பிளவுபட்டே தீரும். அது தமிழீழம் மலர வழிவகுக்கும். நாடெங்கும் மீண்டும் இரத்த ஆறு ஓடும்.

இப்படியான நிலைமை ஏற்படக் கூடும் என்று ஜனாதிபதிக்கும் தெரியும்.

13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த நாம் ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம். இதைப் பல தடவைகள் நாம் தெரிவித்து விட்டோம்.

தான் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி என்ற மமதையுடன் ஒவ்வொரு நாளும் வாய்க்கு வந்த மாதிரி கருத்துக்களை வெளியிட்டு வருகின்றார் ரணில் விக்கிரமசிங்க.

சிங்கள மக்களையும், தமிழ் மக்களையும், முஸ்லிம் மக்களையும் ஏமாற்றும் நோக்குடனேயே ஜனாதிபதி செயற்படுகின்றார். ஆனால், சிங்கள மக்கள் எப்போதும் விழிப்பாகவே இருக்கின்றார்கள்.

ஜனாதிபதி நடைமுறைக்குச் சாத்தியமில்லாத இப்படியான கருத்துக்களை வெளியிட்டுத் தனது பதவிக் காலத்தை இழுத்தடிப்பார் என்று தெரிந்துதான் அவரின் சர்வகட்சிக் கூட்டத்தை நாம் புறக்கணித்தோம் – என்றார்.

## 'கறுப்பு ஜனவரி' .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தக் கவனயீர்ப்பில் ஊடக, சிவில் மற்றும் தொழிற்சங்க அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

மட்டக்களப்பு காந்தி பூங்கா வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள ஊடகவியலாளர்கள் நினைவுத் தூபியிலும் 'கறுப்பு ஜனவரி' போராட்டம் இடம்பெற்றது. கொட்டு மழையினையும் பொருட்படுத்தாது அமைதியான முறையில் ஊடகவியலாளர்கள், சிவில் சமூகப் பிரதிநிதிகள் போராட்டத்தில் கலந்து கொண்டிருந்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், மட்டு. ஊடக அமையம், கிழக்கு மாகாணத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் மற்றும் கிழக்கு மாகாண ஊடகவியலாளர் ஒன்றியம் ஆகியன ஒன்றிணைந்து நடத்திய இந்தக் கவனயீர்ப்புப் போராட்டம் மட்டக்களப்பு தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத் தலைவர் வா.கிருஸ்ணா தலைமையில் நடைபெற்றது.

இதன்போது உயிர்நீத்த அனைத்து ஊடகவியலாளர்கள் நினைவாக மெழுகுவர்த்தியேற்றப்பட்டு, இரண்டு நிமிட நேரம் அஞ்சலி செலுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து ஊடகவியலாளர்கள், மதத்தலைவர்கள் மற்றும் சமூக செயற்பாட்டாளர்கள் பல்வேறு பதாதைகள் ஏந்திக்க கவனயீர்ப்பில் ஈடுபட்டனர்.

## மைத்திரியை .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு – கோட்டை நீதிவான் திலின கமகே கண்டித்துள்ளார்.

இதையடுத்து அவர் பிரதிவாதி கூண்டில் ஏறினார் என்று கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலைத் தடுக்கத் தவறியமை தொடர்பில் அருட்தந்தை சிரில் காமினி உள்ளிட்ட இருவர் தாக்கல் செய்த மனு மீதான விசாரணையின் போதே இந்தக் கண்டிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இதன்போது, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பிரதிவாதி கூண்டில் ஏறாது, அதற்கு வெளியே நின்றதை அவதானித்த முறைப்பாட்டு தரப்பு சட்டத்தரணி ரியென்சி ஹர்சகுலரத்ன நீதிமன்றத்தின் கவனத்துக்கு அதனைக் கொண்டு சென்றார்.

எனினும், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சார்பில் நீதிமன்றில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி பைசர் முஸ்தபா, தமது கட்சிக்காரர் சார்பில் தொடரப்பட்டுள்ள தனிப்பட்ட முறைப்பாட்டுக்கமைய, எதிர்காலச் செயற்பாடுகளுக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் தடை விதித்துள்ளது என்று தெரிவித்தார்.

எனவே, அவர் சாட்சி கூண்டில் ஏற வேண்டிய அவசியமில்லை என்றும் சட்டத்தரணி சுட்டிக்காட்டினார்.

இதையடுத்து மனுதாரர்கள் மேன்முறையீட்டு நீதிமன்றில் பிரதிவாதியான மைத்திரிபால சிறிசேன மீதான வழக்கு நடவடிக்கைகளைத் தற்காலிகமாக முன்கொண்டு செல்வதில்லை என அறிவித்துள்ள போதும், பிரதிவாதி, கூண்டில் ஏற வேண்டியதில்லை என எந்த இடத்திலும் கூறவில்லை என்று கொழும்பு – கோட்டை நீதவான் திலின கமகே குறிப்பிட்டார்.

இதன்பின்னர் முன்னாள் ஜனாதிபதி சாட்சி கூண்டில் ஏறியுள்ளார்.

இந்த வழக்கு மீதான விசாரணை மீண்டும் மார்ச் 17 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## வடக்கு - கிழக்கிலிருந்து ..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் மூன்று பீடங்களின் மகாநாயக்க தேரர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பௌத்த மத ஸ்தலங்களின் பாதுகாப்பையும் இருப்பையும் உறுதிப்படுத்துவது அரசின் கடமை என ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதத்தில் தேரர்கள் தெரிவித்துள்ளனர்.

பாதுகாப்புப் படையினர் போரின் பின்னர் வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள பௌத்த மதத் தலங்களைப் பாதுகாப்பதற்கும் பராமரிப்பதற்கும் அளப்பரிய

(10ஆம் பக்கம் பார்க்க)




காலைக்கதிர் Kalaikkathir

'காலைக்கதிர்' பத்திரிகையில் கீழ்வரும் வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. உதவி ஆசிரியர்
2. பக்க ஒப்புநோக்குநர்
3. பக்கவடிவமைப்பாளர்
4. செய்தியாளர்கள்
5. இத்துறைகளில் பயிற்சி பெற விரும்புவோர்களும் தொடர்புகொள்ளலாம்.

தொடர்புகளுக்கு -077 307 8799

காலைக்கதிர் Kalaikkathir

# டிஜிற்றல் பொருளாதாரத்தை ஊக்கப்படுத்த நவீன தொழில்நுட்ப அறிமுகம் அவசியமாகும்!



## ஜனாதிபதி ரணில் வலியுறுத்து

நான்காவது மற்றும் ஐந்தாவது தொழிற்புரட்சிக ளில் உள்ள புதிய தொழில் நுட்பத்துடன் கலந்த டிஜிற் றல் பொருளாதாரத்தை ஊக்கப்படுத்தத் தேவையான நவீனதொழில்நுட்பத்தை இலங்கையின்கைத்தொழில் களில் அறிமுகம் செய்து நாட்டிலுள்ள கைத்தொழில் கல்வி மற்றும் பயிற்சி வாய்ப்புகளை மேம்படுத்த வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

2023 ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டில் இலங்கையில் நடத்தப்படவுள்ள 'புதிய டிஜிற்றல் பொருளாதாரம் தொடர்பான சர்வதேச மாநாடு மற் றும் கண்காட்சி' தொடர்பான முதற்கட்ட கலந்துரையா டல் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலே ஜனாதிபதி மேற்படி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்தவை வரு மாறு –

இந்த நாட்டில் உள்ள தொழில்களை புதிய தொழில் நுட்பத்துடன் இணைந்த டிஜிற்றல் பொருளாதாரத் துக்கு மாற்றுவை எவ்வாறு ஊக்குவிப்பது என்பதை அடையாளங்காண்பதன் மூலம், தற்போதைய நெருக் கடியை வெற்றிகொள்ளவும், உற்பத்தி மற் றும் செயல்திறனை மேம்படுத்தவும் தொழில்நுட் பத்தை எவ்வாறு பயன்படுத்துவது போன்ற விடயங் களைக் கண்டறிவதே இந்தக் கண்காட்சியின் முக்கிய நோக்கமாகும்.

மேலும் நவீன தொழில்நுட்பத்துடன் இணைந்து ஓர் ஏற்றுமதி மையமாக இலங்கையை மாற்றுதல், சேவை மற்றும் ஏற்றுமதித் துறைகளில் நேரடி அந்நிய முதலீட்டை ஊக்குவிக்கும் நிலையை ஏற்படுத்துதல், உள்நாட்டுக் கைத்தொழிலுக்காக சிறந்த சர்வதேச நடைமுறைகளைக் கொண்டு வருதல் மற்றும் முன் னணி தொழில்துறையினருடன் வலையமைப்பை ஏற்படுத்துதல் என்பன இதன் ஊடாக எதிர்பார்க்கப் படுகிறது.

சைபர் பௌதீக கட்டமைப்பு, இணையத் தகவல், இணைய சேவைகள் (105), ரோபோ தொழில்நுட்பம், பாரிய தரவு , கிளவுட் கணனி மற்றும் உற்பத்தி, மேம் படுத்தப்பட்ட யதார்த்தம் மேம்படுத்தப்பட்ட செயற்கை நுண்ணறிவு போன்ற தொழில் நுட்பங்கள் தொடர்பில் கவனம் செலுத்தி இந்த புதிய டிஜிற்றல் தொழில்நுட் பம் மூலம் தொழில்துறை துறையில் நவீன தொழில் நுட்ப கருவிகள் என்பன இந்தக் கண்காட்சி ஊடாக அறிமுகம் செய்யப்படவுள்ளன.

பல்வேறு துறைகளினூடாக டிஜிற்றல் பொருளாதார அபிவிருத்தியை அடைவதன் ஊடாக நாடளாவிய ரீதியில் உள்ள சமூகப்படித்தரங்களைச் சேர்ந்த இனக் குழுக்களுக்கு பொருளாதார நன்மைகளை வழங்கி, அதன் ஊடாக சமூகத்தை வலுப்படுத்துவது தொடர்பாகவும் இந்தக் கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்டது.

இந்தக் கண்காட்சியின் ஏற்பாடுகள் யாவும் தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் தலைமையில் நிதி, வெளிவிவகாரம், கைத்தொழில், கல்வி, போக்குவரத்து, வர்த்தகம், விவசாயம் உள்ளிட்ட 13 அமைச்சுக்களின் பிரதிநிதிகள் அடங்கிய வழிநடத்தல் குழுவால் முன்னெடுக்கப்படும். தொழில்நுட்ப இரா ஜாங்க அமைச்சர் கனக ஹேரத் உள்ளிட்ட தொடர்புள்ள அமைச்சுக்களின் செயலாளர்கள், ஏற்றுமதி அபிவி ருத்திச் சபை, இலங்கை முதலீட்டுச் சபை, வர்த்தக சம்மேளனம் மற்றும் இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிறுவனம் மற் றும் தனியார் துறையின் பிரதிநிதிகள் ஆகியோரும் இதில் கலந்துகொண்டனர்.

# நாட்டின் மருந்து தட்டுப்பாட்டை நீக்குவதற்கு உலக சுகாதார ஸ்தாபனம் உதவ வேண்டும்!

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கோரிக்கை

இலங்கை எதிர்கொண்டுள்ள மருந்துதட்டுப்பாட்டை நீக்குவதற்கு உலக சுகாதார ஸ்தாபனம் தலையிட வேண்டும் என அரசமருத்துவ அதிகாரிகள் சங்கம் அவசரவேண்டுகோள் விடுத்துள்ளது.

இலங்கைக்கு பொருள்கள் தொழில்நுட்ப உதவி களை வழங்குவதன் மூலம் மருந்துப்பொருள்கள் உபகரணங்கள் தட்டுப்பாடு காரணமாக இலங்கை மக்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளுக்கு உலக சுகாதார ஸ்தாபனம் தீர்வை வழங்கவேண்டும் என அரசமருத்துவ அதிகாரிகள் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

சுகாதார அமைச்சு உட்பட அதிகாரிகளுக்கு அவசி யமான அழுத்தங்களை உலக சுகாதார ஸ்தாபனம் கொடுக்கவேண்டும் எனவும் அரசமருத்துவ அதி காரிகள் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் தட்டுப்பாடுகள் காரணமாக மக்கள் எதிர்கொண்டுள்ள நெருக்கடி தொடர்பாக நாங்கள் தொடர்ச்சியாக ஜனாதி பதிக்கும் சுகாதார அமைச்சருக்கும் தெரிவித்துவந் துள்ளோம் என அரசமருத்துவ அதிகாரிகள் சங்கத் தின் செயலாளர் வைத்தியர் ஹரித அலுத்கே தெரி வித்துள்ளார். உலக சுகாதார ஸ்தாபனத்துக்கான வேண்டுகோளைக் கையளித்த பின்னர் இதனை அவர் தெரிவித்துள்ளார்.

தாங்க முடியாத அளவிற்கு மருந்துப்பொருள்க ளின் விலைகள் அதிகரித்துள்ளன. மருந்துகளைக் கொள்வனவு செய்வதில் பல முறைகேடுகள், ஊழல் கள் இடம்பெறுகின்றன எனத் தெரிவித்துள்ள அவர், அதிகாரிகளிடம் இது தொடர்பாக வேண்டுகோள் விடுத்துள்ள போதிலும் சாதகமான பதில் கிடைக்க வில்லை எனக் குறிப்பிட்டுள்ளார்.

நோயாளிகள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைக ளுக்கு உரிய அதிகாரிகளுக்குத் தெரிவிப்பதன் மூலம் தீர்வைக் காணமுடியாது என்பதை அரசமருத்துவ அதிகாரிகள் சங்கம் உணர்ந்துள்ளது. இதன் காரண மாகவே உலக சுகாதார ஸ்தாபனத்தை நாடத் தீர் மானித்துள்ளோம் எனவும் அவர் தெரிவித்துள் ளார்.



## தேயிலைத் தொழிற்சாலை தீ பிடித்து கம்பளை குருந்துவத்தையில் நாசம்!

கம்பளை குருந்துவத்தையில் உள்ள தேயிலை தொழிற்சாலையில் ஏற்பட்ட தீ விபத்தில் தொழிற்சாலை முற்றாக எரிந்து நாசமாகியதுடன் இருவர் தீக்காயங் களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என குருந்துவத்தை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த தேயிலை தொழிற்சாலை தீப்பற்றி எரிவதாக குருந்துவத்தை பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதுடன் கண்டி தீயணைப்பு பிரிவினருக்கும் அறிவிக்கப்பட்டுள் ளது.

மேற்படி தேயிலைத் தொழிற்சாலையின் உரிமை யாளரின் மகனும் தொழிலாளி ஒருவரும் தீ காயங் களுடன் வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ள னர்.

இந்த தீ விபத்தின் சுமார் இரண்டு கோடி ரூபாவுக்கு மேல் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# மின்சாரசபைக்கெதிராக சட்ட நடவடிக்கை

## தயாராகிறது பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு



கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை நடை பெறும் நிலையில், எவ்வித தடையுமின்றி தொடர்ச்சி யாக மின்சாரத்தை விநியோகிக்குமாறு மனித உரிமை கள் ஆணைக்குழு இலங்கை மின்சார சபைக்கு விடுத்துள்ள உத்தரவை நிறைவேற்றத் தவறும் பட்சத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு எழுத்துமூல அறிவித்தல் விடுத்துள் ளது.

இது தொடர்பில் பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவின் தலைவர் ஜானக ரத்நாயக்க, மனித உரிமை கள் ஆணைக்குழுவின் தலைவருக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளார்.

# ஆணைக்குழு உறுப்பினர் பதவி விலகியமை தேர்தலை நிறுத்துவதற்கான சதித் திட்டம்!

## பவ்ரல் அமைப்பு குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 28

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள இந்த சந்தர்ப்பத்தில் அதன் உறுப்பினரொருவர் பதவியை இராஜினாமா செய்துள்ளமை பொருத்த மற்றது. ஏதேனுமொரு வகையில் தேர்தலை நிறுத் துவதற்கான சதித்திட்டமாகவே நாம் இதனைப் பார்க்கின்றோம் என்று பவ்ரல் அமைப்பின் தலைவர் றோஹண ஹெட்டியாரச்சி தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

உள்ளூராட்சிமன்றத் தேர்தலை ஏதேனுமொரு வகையில் நிறுத்துவதற்கான சதித்திட்டமாகவே நாம் இதனைப் பார்க்கின்றோம். இது பொறுப்பற்றவொரு செயற்பாடாகும். எனவே இது போன்ற பதவி விலகல் களை ஒருபோதும் அனுமதிக்கமுடியாது.

தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கு மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாகவும் கடந்த வாரம் செய்திகள் வெளியாகின. எவ்வாறிருப்பினும் இந்த பதவி விலகல் உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் எந்த வகையிலும் தாக்கம் செலுத்தாது. அரசமைப்பின் 104 ஆவது உறுப்புரையில் இது தொடர்பில் தெளி வாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு பதவி வெற்றிடங்கள் ஏற்படுகின்றன என்பதற்காக ஆணைக்குழு எடுத்த தீர்மானங்கள் செல்லுபடியற்றதாகா. தேர்தல் ஆணைக்குழு என்பது நாட்டில் முக்கியத்துவம் மிக்க ஒன்றாகும். அவ் வாறிருக்கையில் தேர்தலொன்றுக்கான அறிவித் தல் விடுக்கப்பட்டுள்ள நிலையில் இவ்வாறு பதவி விலகுகின்றமை ஏற்றுக் கொள்ளக் கூடிய விடய மல்ல.

அரசமைப்பு பேரவை தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்களை மாற்றும் என்று நாம் எதிர்பார்க்கவில் லை. அவ்வாறு மாற்றங்கள் செய்யப்பட்டால் தேர்தல் தொடர்பில் நம்பிக்கையற்ற ஒரு நிலைமையை அது ஏற்படுத்தும். எவ்வாறிருப்பினும் புதிய உறுப்பினர் கள் நியமிக்கப்பட்டாலும், அதுவும் தேர்தலில் தாக்கத்தை செலுத்தாது. – என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## எது தடுக்கின்றது?

கொழும்பில் புதிய ஆட்சியாளர்கள் அதிகாரத்திற்கு வரும் ஒவ்வொரு தடவையும் அவர்களுடன் அதிகாரப் பகிர்வு தொடர்பில் பேச்சுக்குச் செல்வது தமிழ்த் தலைமைகளின் மரபு. தந்தை செல்வா காலத்திலிருந்து தமிழீழ விடுதலைப் புலிகள் ஊடாக இன்று வரையில் இந்த மரபு தொடர்கின்றது. ஆனால் அதன் பெறுபேறுகள் எதுவுமில்லை. இந்த நிலையில் இன்றைய அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் இந்தத் தடவைக்கான பேச்சுக்களை தமிழ்த் தரப்புத் தொடங்கியபோது முன்வைத்த கோரிக்கைகளில் ஒன்று அரசமைப்பில் உள்ள 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தங்கள் என்பது.

ஆனால், அது நடக்கவில்லை. நிறைவேற்று அதிகாரம் கொண்டவர் என்பதால் தன்னால் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த முடியும் என்று நேற்று முன்தினம் நடந்த சர்வகட்சிக் கூட்டத்தில் ரணில் தெரிவித்திருக்கிறார். 13ஆவது திருத்தத்தை எதிர்க்கும் சரத் வீரசேகர, வஜிர அபேவர்த்தன, அத்துரலி ரத்ன தேரர் ஆகியோரின் கருத்துக்களுக்குப் பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்திருக்கிறார்.

நிறைவேற்றதிகாரம் கொண்டவர் என்பதனால் சட்டத்தை நடைமுறைப்படுத்தத் தான் கடமைப்பட்டவர் என்றும் கடந்த 37 ஆண்டுகளாகப் பதவி வகித்த எல்லா அரச தலைவர்களும் அதனை நடைமுறைப் படுத்தவே விரும்பினார்கள் என்றும் ரணில் அங்கு மேலும் தெரிவித்திருக்கிறார். இதற்கு முன் இருந்த எல்லோரும் விரும்பினார்கள். இப்போது இவரும் விரும்புகின்றார். ஆனால் 13ஆவது திருத்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை. அப்படியானால் எது தடுக்கிறது?

13ஆவது திருத்தத்தை நிறைவேற்ற சிங்களத் தலைவர்கள் விருப்பம் கொண்டிருக்கிறார்கள் என்பது உண்மையில்லை என்பதைத்தான் கள யதார்த்தம் வெளிப்படுத்துகின்றது. சிங்கள முதலமைச்சர்கள் உட்பட தெற்கிலும் பெரும்பான்மையானவர்கள் காணி, பொலிஸ் அதிகாரங்களுடன் 13 முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவேண்டும் என்பதைத்தான் விரும்புகின்றார்கள். அதைப் பல சமயங்களில் அவர்கள் பொதுவெளிகளிலும் வெளிப்படுத்தியிருக்கிறார்கள். ஆனாலும் ஏதோ தடுக்கிறது.

பௌத்த சிங்கள மேலாதிக்க சிந்தனை, இது சிங்களவர்களுக்கு மட்டுமான நாடு என்கிற எண்ணம் இவைதான் 13ஐ நிறைவேற்ற விடாமல் தடுக்கின்றது. அதுதான் அதிகாரங்களைப் பகிர்ந்துகொண்டு ஒரு தீர்வைக் காண்பதற்கும் தடையாக இருக்கின்றது. இந்த மேலாதிக்க சிந்தனை எல்லோருக்குள்ளும் இருப்பதன் காரணமாகத்தான், மிகச் சொற்பமாக ஒலிக்கும் எதிர்ப்புக் குரல்களைத் தூக்கிப் பிடித்துக் கொண்டு 13 நிறைவேற்றத்தை தடுக்கிறார்கள் ஆட்சி அதிகாரத்தில் உள்ளவர்கள்.

நிறைவேற்று அதிகாரம் இருப்பதால் சட்டத்தை நிறைவேற்ற வேண்டியது தனது கடமை என்று ரணில் விக்கிரமசிங்கவும் சொல்லிக்கொண்டிருக்கவேண்டியதில்லை. அதனை நிறைவேற்றிக்காட்ட வேண்டும். அதைத்தான் தமிழ்த் தரப்பும் கோரிக்கையாக முன்வைத்து. ஆனால், நிவேற்றுவேன் நிறைவேற்றுவது எனது கடமை என்று வசனங்களைப் பேசிக்கொண்டு எதிர்ப்பாளர்கள் பலம்பெற்று திரண்டு வந்து தம்மை வலுப்படுத்தும் வரை சந்தர்ப்பத்தை வழங்கி, பின்னர் அதனையே காரணமாகக் காட்டிக்கொண்டு பின்வாங்கி விடும் பழைய தந்திரத்தையே ரணிலும் கையிலெடுத்திருக்கிறார் போன்று தோன்றுகின்றது.

## தேர்தலுக்கு தயாரில்லை என்பதை ஜனாதிபதி மக்களுக்கு பகிரங்கமாக அறிவிக்க வேண்டும்

### அநுரகுமார கோரிக்கை



மார்ச் மாதம் 09 ஆம் திகதி உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடத்தாவிட்டால் அரசாங்கத்துக்கு எதிரான மக்கள் போராட்டம் தீவிரமடையும்.

தேர்தலை பிற்போடும் சூழ்ச்சியை திரைமறைவில் இருந்து முன்னெடுப்பதை விடுத்து ஜனாதிபதி தான் தேர்தலுக்குத் தயார் இல்லை என்பதை மக்களுக்குப் பகிரங்கமாக அறிவிக்க வேண்டும் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

நாவல பகுதியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண மக்களாதரவு அத்தியாவசியமாகும். மக்களின் ஆதரவு இல்லாமல் அரசாங்கத்தை சிறந்த முறையில் நிர்வகிக்க முடியாது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்துக்கு மக்களாணை கிடையாது, ஆகவே அவர் எடுக்கும் தீர்மானங்களுக்கு நாட்டு மக்கள் ஒருபோதும் ஒத்துழைப்பு வழங்கப் போவதில்லை.

தேர்தல் ஊடாகவே மக்கள் தமது அரசியல் நிலைப்பாட்டை வெளிப்படுத்த முடியும். ராஜபக்ஷர்களின் பலவீனமான நிர்வாகத்துக்கு எதிராக மக்கள் போராட்டத்தின் ஊடாக தமது எதிர்பபை வெளிப்படுத்தினார்கள்.

பொது தேர்தலில் மக்களால் புறக்கணிக்கப்பட்ட ரணில் விக்கிரமசிங்க பொது ஜன பெரமுனவின் ஆதரவுடன் ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டார்.

பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண்பதாகக் குறிப்பிட்டுக்கெரண்டு ஆட்சிக்கு வந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடுத்தர மக்களை வரி விதிப்பால் நெருக்கடிக்குள்ளாக்கி ராஜபக்ஷர்களை அருமையாகப் பாதுகாத்துள்ளார். இந்த அரசாங்கத்துக்கு எதிராக மக்கள் தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்த இடமளிக்க வேண்டும்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலை பிற்போட ஜனாதிபதி செய்யாத சூழ்ச்சி ஏதும் கிடையாது, அனைத்து தடைகளையும் மீறி தேர்தலுக்கு தற்போது திகதி நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

தற்போது ஆணைக்குழு உறுப்பினர் விவகாரத்தில் புது பிரச்சினை தோற்றம் பெற்றுள்ளது,தேர்தலை நடத்த தோற்றம் பெறும் அனைத்து நெருக்கடிகளுக்கு பின்னணியில் ஜனாதிபதியே உள்ளார்.

மார்ச் மாதம் 09 ஆம் திகதி உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்தாவிட்டால் அரசாங்கத்துக்கு எதிரான மக்கள் போராட்டம் தீவிரமடையும்.

தேர்தலைப் பிற்போடும் சூழ்ச்சிகளைத் திரைமறையில் இருந்து முன்னெடுப்பதை விடுத்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தான் தேர்தலுக்கு தயார் இல்லை என்பதை நாட்டு மக்களுக்கு பகிரங்கமாக அறிவிக்க வேண்டும். – என்றார்.

## கடன் சுமையிலிருந்து இலங்கையை இந்த தலைமுறையில் மீட்பது கடினம்!

### வேதனையுடன் தெரிவிக்கிறார் ரஞ்சன் ராமநாயக்க



நாட்டின் கடனில் ஏறக்குறைய 14 ரில்லியன் ரூபா கடன் சுமையில் இருந்து இன்றைய தலைமுறையின் இறுதி வரை நாட்டை மீட்டெடுப்பது கடினமாகும் என முன்னாள் அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்துள்ளார்.

நடிகரும், முன்னாள் நாடாமன்ற உறுப்பினருமான ரஞ்சன் ராமநாயக்க, விசேட தேவைகள் மற்றும் பொருளாதார சிரமங்கள் உள்ள சிறுவர்கள் மற்றும் இளைஞர்களுக்கு வழங்குவதற்காக 2,000 மடிக்கணினிகளை நன்கொடையாக பெற்றுக்கொண்டு அண்மையில் அமெரிக்காவிலிருந்து நாடு திரும்பினார்.

இலவச மடிக்கணினி வழங்கும் திட்டத்தை ஆரம்பித்து வைத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

இளைய தலைமுறையினரிடையே அறிவைப் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்றும், தற்போதைய இக்கட்டான சூழ்நிலையில் இருந்து நாட்டை உயர்த்த இது சிறந்த வாய்ப்பாகும் என்றும் கூறியுள்ளார். இலங்கையில் அதிக மனித வளங்கள் உள்ளன. ஆனால் அந்த வளங்களில் பெரும்பாலானவை தொழிலாளர் பிரிவின் கீழ் பயன்படுத்தப்படவில்லை. எனினும், பெரும்பாலான வளர்ந்த நாடுகளில், மக்கள் தங்கள் மனித வளத்தைப் பயன்படுத்தி வீட்டில் தங்கி பல கோடிக் கணக்கான டொலர்களை சம்பாதிக்கிறார்கள் என்று ரஞ்சன் குறிப்பிட்டுள்ளார்.

முந்தைய அரசாங்கங்கள் பாடசாலை மாணவர்களுக்கு கணினிகளை விநியோகிக்க முயற்சித்தன. ஆனால் திட்டம் கிடப்பில் போடப்பட்டது என்றும் அவர் தெரிவித்துள்ளார். இந்தத் திட்டம் எந்த அரசியல் கட்சியின் கீழும் வராது மற்றும் எந்த அரசியல்வாதியும் ஆதரிக்கவில்லை. நாட்டின் அனைத்து குடிமக்களும் இதன் மூலம் பயனடைவார்கள்.

அரசியலில் ஈடுபடும் உரிமைகள் குறைக்கப்பட்டாலும் சமூக சேவையில் ஈடுபடும் உரிமையை மட்டுப்படுத்த முடியாது எனவும், மடிக்கணினிகளை இலவசமாக விநியோகித்ததாகக் கூறி பல்வேறு சமூக ஊடக தளங்களில் நடத்தப்படும் போலியான நிகழ்ச்சிகளில் பலியாகவோ அல்லது ஈடுபடவோ வேண்டாம் என்றும் ராமநாயக்க பொது மக்களிடம் கேட்டுக்கொண்டார்.

## 10 வயது சிறுமி பாலியல் துஷ்பிரயோகம் 72 வயது முதியவருக்கு 10 வருட சிறை!

13 வருடங்களுக்கு முன்னர் லுணுகம் வெஹர, பதவிகம பகுதியில் பத்து வயது சிறுமியை கடுமையாக துஷ்பிரயோகம் செய்த 72 வயதுடைய திருமணமாகாத ஒருவருக்கு 10 வருட கடூழியச் சிறைத் தண்டனை விதித்து அம்பாந்தோட்டை மேல் நீதிமன்ற நீதிபதி பிரியந்த லியனகே உத்தரவிட்டார்.

மேலும்10 ஆயிரம் ரூபா அபராதம் மற்றும் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு ஒரு லட்சம் ரூபா இழப்பீடு செலுத்தவும் உத்தரவிடப் பட்டது.

காலைக்கதிர் Kalaikkathir

# நாட்டில் புதிய வரி அறவீட்டுக்கு எதிராக மத்திய வங்கி ஊழியர்கள் கவனவீர்ப்பு!







அரசாங்கத்தால் புதிதாக அமுல்படுத்தப்பட்டுள்ள வரிச் சீர்திருத்தங்கள் தொடர்பில் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியிருக்கும் இலங்கை மத்திய வங்கி ஊழியர்கள், மத்திய வங்கிக்கு முன்பாகக் கவனவீர்ப்புப் போராட்டமொன்றையும் முன்னெடுத்துள்ளனர்.

தற்போது அரசாங்கத்தால் புதிதாக மேற்கொள்ளப்பட்டுள்ள வரிச் சீர்திருத்தங்களின் பிரகாரம், ஒரு லட்சம் ரூபாவுக்கும் அதிக வருமானம் பெறும் அனைவரும் வரி செலுத்தவேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளாகியிருப்பதுடன், வருமானத்தில் பெருந்தொகையை வரியாக செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த வரி அமுலாக்கம் தொடர்பில் பல்வேறு துறையினரும் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தி வரும் நிலையில், மத்திய வங்கியின் அனைத்து தொழிற்சங்கங்களின் கூட்டிணைவால் மத்திய வங்கிக்கு முன்பாக மேற்படி கவனவீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

குறிப்பாக, ஆட்சியாளர்கள் எவ்வித அர்ப்பணிப்பையும் செய்யாமல், ஊழியர்களிடம் மாத்திரம் அசாதாரணமான முறையில் வரி அறவிடுவது ஏற்றுக்கொள்ளத்தக்க விடயமல்ல என்று சுட்டிக்காட்டிய அவர்கள், இந்த விவகாரத்துக்கு நியாயமான தீர்வொன்று வழங்கப்படாவிட்டால், தமது போராட்டம் தொடரும் என்றும் எச்சரித்தனர்.




## வாள் வெட்டு சந்தேகநபர் ஒருவர்கைது!

யாழ்ப்பாணம் கல்லுண்டாய் பகுதியில் இடம்பெற வாள் வெட்டு சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கல்லுண்டாய் பகுதியில் உள்ள வீடொன்றினுள் கடந்த முதலாம் திகதி அத்துமீறி உள்நுழைந்த கும்பல் ஒன்று வீட்டில் இருந்தவர்கள் மீது வாள் வெட்டு தாக்குதலை மேற்கொண்டு இருந்தது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வந்த நிலையில் மானிப்பாய் பகுதியை சேர்ந்த 22 வயதான பிரதான சந்தேக நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபரை மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## ஒரே வாரத்தில் 42 விமானிகள் பதவி துறந்து வெளியேறினர்

**ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸின் விட்டுவிலக மேலும் பலர் முஸ்தீபு**

ஸ்ரீலங்கன் ஏயர் லைன்ஸின் 42 விமானிகள் கடந்த வாரம் தமது பதவி விலகல் கடிதங்களை கையளித்தனர் எனவும், 85 விமானிகள் விமான போக்குவரத்து அதிகாரசபையின் சான்றிதழ் கடிதங்களுக்கு விண்ணப்பித்துள்ளனர் எனவும் இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கன் ஏர்லைன் விமானி ஒருவர் மாதாந்த சம்பளமாக 10 ஆயிரம் டொலர் பெறுகிறார், ஆனால் டொலர் மதிப்பு 225 ரூபா என்ற குறைந்த அளவில் கணக்கிடப்படுகிறது.

மற்ற சர்வதேச விமான நிறுவனங்களின் பைலட் 30 ஆயிரம் டொலர் முதல் 40 ஆயிரம் டொலர் வரை வரியில்லா சம்பளம் பெறுகின்றனர் என்றும் அதிகாரி சுட்டிக்காட்டியுள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.



- செல்லத்துரை ரவீந்திரன் -

அங்கம் - 251

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## சவர்க்காரத்தில் கை கழுவிய தமிழ் ஊடகங்கள்

“இரத்தவெறிகளின், வெற்றிக்களிப்பின் பெருமைகளால், ஊதிப் பெருத்து நிற்கும் ராஜபக்ஷக்களால் விடுதலைப் புலிகளையும் அவர்களது தலைவர்களையும் அழிப்பது என்பதற்கு மேலாக எதனையும் சிந்திக்க முடியாதெனினும், எங்களுக்கு நாளையும் அதற்கு அடுத்த நாளையும் சிந்திப்பது இன்றியமையாததாகிறது. இந்த சர்வநாச அழிவுகளில் இருந்து மிகுதமாகும் தமிழ் மக்களின் அபிலாசைகளைத் தீர்ப்பதற்கு நியாயமான செயற்பாடுகளை எடுப்பதற்குத் தவறினால், பகலைத் தொடர்ந்து இரவு வருவது போல, சரித்திரம் இன்றிருக்கும் மக்களிலிருந்து, அடுத்த சந்ததியானாலும் தொடர்ந்து வரும். போரை முடிவுக்குக் கொண்டு வர செய்யப்பட்ட தியாகங்களும் வீணாகியவையாகிவிடும்.” – இதனைத் தனது பத்திரிகையான 'த சண்டே லீடரில்' 04 ஜனவரி 2009 தலையங்கமாகப் பதிந்தவர் கொல்லப்பட்ட பத்திரிகை ஆசிரியர் லஸந்த விக்ரமதுங்க.

இப்பத்திரிகை சிங்களப் பகுதிகளில் இருந்து தமிழரின் விடுதலைப் போராட்டத்திற்கும், அவர்களது அபிலாசைகள் நியாயமாக தீர்க்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தி, போரைக் காரணம் காட்டி பெருமளவான ஊழல்கள் நடக்கின்றமையையும், உக்கிரேன் அரசிடமிருந்து வாங்கப்பட்ட விமானங்களில் கோட்டாபய ராஜபக்ஷவுக்குத் தரகுத் தொடர்புகள் இருந்தமையையும் அம்பலப்படுத்தி இருந்தது. அந்தக் கட்டுரைக்கு எதிராக கோட்டாபய மான நஷ்ட வழக்குத் தொடர்ந்து இருந்தார்.

04 ஜனவரி 2009 தலையங்கத்தின் பின் மஹிந்த ராஜபக்ஷ லஸந்த விக்ரமதுங்கவை 'பயங்கரவாதி' என விமர்சித்தார்.

08 ஜனவரி 2009 லஸந்த விக்ரமதுங்க தனது காரை ஓட்டிக்கொண்டு வேலைக்குச் சென்ற வேளையில் பட்டப் பகலில் ஜனசந்தடி உள்ள வீதியில், அதிலும் அதிவிசேட பாதுகாப்பு வலயத்தில் அவரைத் தொடர்ந்து மோட்டார் சைக்கிளில் வந்தவர்களால் வழிமறிக்கப்பட்டு, கூறிய ஆயுதங்களால் தாக்கியதில் மண்டை ஓடு பிளந்து, வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டும் மரணித்தார். ஒரு பிரபலம் வாய்ந்த ஊடகவியலாளர் இப்படிக் கொலை செய்யப்பட்டமை தென்பகுதியை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. ஏனெனில் வடக்கு, கிழக்கு பகுதிகளில் 2004 முதல் அது பழகிப்போன விடயம்.

அவர் இறப்பதற்கு முன் ஜனாதிபதி மஹிந்தவுக்கு எழுதி வைத்திருந்த குறிப்பு, அவர் மறைந்த பின் அந்தப் பத்திரிகையால் வெளியிடப்பட்டது. அதில் அவர் “மக்கள் அடிக்கடி என்னிடம் இப்படி அபாயங்கள் தரக்கூடியவற்றை ஏன் எழுதுகிறேன், இன்னும் சிறிது நாள்களில் நானே அழிக்கப்படக்கூடும் என ஆதங்கங்கள் தெரிவிப்பர், ஆம், அது நடக்கும் என்பதையும் நான் அறிவேன், அது தவிர்க்க முடியாதது. ஆனால் நாங்கள் இப்போது பேசாவிட்டால், பேச முடியாதவர்களுக்காக, அவர்கள் சிறுபான்மையினரோ பின் தங்கிய அல்லது துன்புறுத்தப்படுபவரோ அவர்களுக்காக பேச எவரும் இருக்க மாட்டோம்.” – என்றார். நாட்டை திகிலடைய வைத்த கடிதத்தின் சில வரிகள் அவை.

'சாட்டர்டே ரிவ்யூ' சிவநாயகத்தினைத் தொடர்ந்து இனப் பிரச்சினையின் கோரத்தையும் கொடூரத்தையும் அநீதியையும் எழுதியவர் மௌனிக்கப்பட்டார். இவருடைய கொலையையும் மக்களின் நிரந்தர தீர்ப்பாயம் (Permanent Peoples' Tribunal) விசாரித்த போது, இந்தக் கொலை திட்டமிட்டு, அரசின் உதவிகளோடு, இராணுவத்தின் துணை படைகளால் நடத்தப்பட்டது என அதன் முன் சமர்ப்பிக்கப்பட்ட ஆதாரங்களில் இருந்து அபிப்பிராயப்பட்டது.

பிள்ளையானின் காரியதரிசி ஆஸாத் மௌலானாவின் சாட்சியமானது லஸந்த விக்ரமதுங்கவின் கொலை தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளால் நடத்தப்பட்டது என்றும், அது மாத்திரமல்ல இன்னும் எவ்வளவோ அரசுக்காக செய்யப்பட்டவைகளில் – பிரதானமாக தமிழ்நெற் சிவராம், மட்டக்களப்பு வீரகேசரி செய்தியாளர் நடேசன், திருகோணமலை பிரஜைகள் குழுவின் விக்னேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ், கிழக்கு மாகாண பல்கலைக்கழக விரிவுரையாளர் ரவீந்திரநாத், ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட போன்றவர்களைக் குறிப்பிட்டு இவர்களெல்லாம் புலனாய்வு பிரிவால் குறி வைக்கப்பட்டு, உளவுப் படைகளால் புறச் சூழல்கள் ஏற்படுத்தப்பட, கருணா, பிள்ளையான் அணிகள் முடித்த காரியங்கள் எனக் கூறப்படுகிறது.

2004 இல் இருந்து 2010 வரை நாட்டில் 44 ஊடகவியலாளர்களும் ஊடகங்களோடு தொடர்புகள் வைத்திருந்ததோரும் சட்டத்துக்கு விரோதமான முறைகளில் கொல்லப்பட்டார்கள். அவர்களில் 35 பேர் தமிழர்கள். அவற்றைச் செய்ததோ அன்றில் ராணுவ பகுதிகளுக்கு உடனடியாக இருந்தவர்களோ விடுதலைப் புலிகள், ஈ.பி.டி.பி., தமிழ் மக்கள் விடுதலை புலிகள்.

இவ்வளவு ஊடகவியலாளர்கள் அழிக்கப்படும் போது தமிழ் மக்களும் அவர்களது ஊடகங்களும் இனம் தெரியாத நபர்களால் நடத்தப்பட்டது என பதிந்தும், எண்ணத்தை வளர்த்தும், சவர்க்கார தண்ணீரில் கை கழுவி, இயேசுவிற்கு தண்டனை சொன்ன பிலாத்து மன்னனை போல வாளாவிருந்தது, இந்தக் கலாச்சாரத்தை வளர்ப்பதில் அதில் அவர்கள் பங்கு பெரிது என அடிக்கடி சொல்லிக் காட்டினேன். இவை தமிழ் மக்களின்



உரிமைப் போராட்டத்திற்கு ஏதாவது வளம் தந்தனவா?

மேலும் ஆசாத் மௌலானா தனது சாட்சியத்தில் 1987 இல் இந்தியப் படையுடன் விடுதலைப் புலிகளின் போராட்டம் வெடித்த போது பிரேமதாஸாவின் ஒத்தாசையோடு விடுதலைப்புலிகள் அமைப்பு தலைநகரில் இராணுவ புலனாய்வு பிரிவின் திட்டங்களோடு சேர்ந்து தமது சொந்த செலவினங்களுக்காக ஆள்களைக் கடத்திப் பணம் பறிக்கும் வழக்கம் இருந்தது, வெள்ளைவான் கடத்தலை விடுதலைப் புலிகளே தொடக்கி வைத்தனர், பின்னர் அவர்களிடமிருந்து பிரிந்த போது கருணா, பிள்ளையான் அதைத் தத்தெடுத்து கொண்டனர் எனக் கூறுகிறார்.

### சாட்சிய பதிவுகள்

ஆஸாத் மௌலானாவின் சாட்சியமாக பதியப்பட்ட விடயம் மனித உரிமை மன்றின் கட்டமைப்புகளுக்கு ஐந்து நாள்கள் தரப்பட்டவை. விடுதலைப் புலிகளில் இருந்து கருணா பிரிந்த காலம் தொட்டு, பின்னர் கருணா – பிள்ளையானது பிரிவு, கருணாவைப் புறந்தள்ளி, மஹிந்த அரசு பிள்ளையானை நம்பிக்கையானவராகக வளர்த்து மாகாண முதலமைச்சராக்கியது, ஜோசப் பரராஜசிங்கத்தின் கொலை, நல்லாட்சி காலத்தில் பிள்ளையானும் உளவாளிகளும் பிணையில்லாத நிலையில் அந்தச் சம்பவங்களுக்காக சிறையில் இருந்தது, வழக்கிலிருந்து விடுதலை பெற தேடிய ஆதரவுகள், மஹிந்த, பஸில் சிறையில் சந்தித்தது, தேர்தலில் வெற்றி பெற்றது, கோட்டாபய ஜனாதிபதியாக வந்தால்தான் வழக்கிலிருந்து வெற்றி பெற்று வெளியே வர வழி பிறக்கும் என்று பேச்சுக்களில் இராணுவப் புலனாய்வுத் திட்டங்களுக்கு இணங்கி ஈஸ்டர் குண்டுத் தாக்குதலில் ஈடுபட்டவர்களுக்கு பயிற்சி அளித்தது, அதன் நடப்புகளுக்காக இராணுவப் பகுதிகளோடு இயங்கியது, இந்தியாவின் உளவுப் படையினரோடான தொடர்புகள், வெளிநாட்டுப் பிரயாணங்கள், அவற்றின் நோக்கங்கள் என இன்று வரையான திகில் நிறைந்த சம்பவங்களை இந்தச் சாட்சியம் கூறியது.

விடுதலை என நம்பிய தமிழ் மக்கள், ஒவ்வொரு பகுதியும் தந்த பிரச்சாரங்கள் செவிப்புலனும் இழந்து, குருடாகாமல் தங்கள் விரல்களாலேயே தங்களது கண்களை குத்திப் பார்வைகள் இழந்தமையையும், அவர்களுக்கு எதிரியான சிங்கள பேரினவாத அரசும் இராணுவமும் இவர்களைப் பிரித்து தமது அதிகாரங்களுக்காக கூலிப்படைகளாக வைத்திருந்தன என்பதையும் உணர்த்துகிறது. வரலாறுகளின் படி சம்பவங்களை அறிந்திருந்தாலும், பதிவுகளின் உண்மை தன்மைகளுக்காக (ஏனெனில் சாட்சியம், அவர்களோடு தொடர்புகளில் இருந்த இராணுவப் புலனாய்வு அதிகாரிகள், அரசியல் வாதிகள், ஊழல் நிறைந்த நீதித்துறை என பலபரப்புகளில் இருந்ததால்) சில ஆதங்கங்கள் இருந்தன.

ஐ.நாவில் இயங்கும் நண்பர்களோடு தொடர்பு கொண்ட போது இப்படியான சாட்சியம் மனித உரிமைகள் சபைக்கோ, அதன் கட்டமைப்புகளுக்கோ, நேரடியாக தரப்பட்டிருப்பின், அதன் பிரதிகளைப் பெறுவது முடியாது, ஆனால் அரசு சார்பற்ற நிறுவனம், சர்வதேச மன்னிப்பு சபை போன்றவை அதை நெறிப்படுத்தியிருந்தால் அவர்களிடமிருந்து பிரதிகளை பெற வாய்ப்பு உண்டு. ஆனால் இதுவரை அப்படியான தகவல்கள் இல்லை என்கிறார்கள்.

சில சமயங்கள் அரசாங்கமும் அதன் இராணுவப் புலனாய்வுகளும் தங்களுக்கு எதிராக இருக்கும் முக்கியமான குற்றச்சாட்டுகளைத் திசை திருப்பி விட இப்படியான சிலரையும் அவர்களது வாக்குமூலங்களையும் குழப்பங்களுக்காக இறக்கி விடுவது உண்டு. லஸந்தவின் கொலையில் அரசாங்கத்துக்கு தொடர்புண்டு, அரசாங்கம், பாதுகாப்போ அல்லது முழுமையான விசாரணைகளோ நடத்தவில்லை எனக் குற்றம் சாட்டப்பட்ட நிலையில் அவர்கள் இராணுவப் புலனாய்வு பகுதிகளின் ஆவணங்களை மறைத்து, இது தமிழ் மக்கள் விடுதலை புலிகளால் செய்யப்பட்டது, அவர்களது சாட்சியமே தாங்கள் நடத்தியதாக ஒப்புக் கொள்கிறார்கள் என விசாரணைகளில் கூறலாம். முக்கியமாக ஈஸ்டர் குண்டுத் தாக்குதல், பல பரிமாணங்கள் எடுக்க, இப்படியான சாட்சியங்கள் புறப்பட வழிகள் உண்டு என்ற எண்ணமும் எழுந்தது. ஆகவே அதனை சிறிது ஆற போட்டிருந்தேன்.

கத்தோலிக்க திருச்சபையின் கேள்விகள், ஈஸ்டர் குண்டு தாக்குதல் பற்றிய விசாரணையின் அறிக்கை மைத்திரியும், பாதுகாப்பு அதிகாரிகளும் விசாரிக்கப்பட வேண்டும் எனத் தெரிவித்தது. மைத்திரிக்கு எதிரான உயர் நீதிமன்ற தீர்ப்பின் சரத்துக்கள் கோட்டாபயதான் வெற்றி பெறுவதற்காகவே இந்தக் குண்டுத் தாக்குதலை நடத்தினார் என நாடாளுமன்றத்திலும் வெளியேயும் பேசப்படுவது, ஆஸாத் மௌலானாவின் சாட்சியங்கள் எல்லாவற்றையும் உறுதிப்படுத்தா விட்டாலும் தமிழ் மக்களுக்கு விழிப்பு தரும் என எண்ணுவதால் மேலும் சிலவற்றை அதிலிருந்து நாளை பகிர்ந்து கொள்கிறேன்.

(வளரும்...)


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# உரலார் கேள்வியும் உலக்கையார் பதிலும்

**1. உரலார் கேள்வி:-** இந்திய வெளியுறவுச் செயலாளர் இங்கு எதற்கு வந்தார் என்று நினைக்கிறீர்கள்?

உலக்கையார் பதில்:- நடனமாட அனைவருக்கும் பயிற்சி கொடுப்பதற்காய் இருக்கும். (தங்களின் தாளத்திற்கேற்ப)

**சல்லடையாரின் சலிப்பு * 'ஆட்டுவித்;தால் யாரொருவர் ஆடாதாரே கண்ணா'**

**2. உரலார் கேள்வி:-** முன்னாள் முதலமைச்சர், தேர்தல் பிரச்சாரத்தின் காரணமாக இந்திய வெளியுறவுச் செயலாளரைச் சந்திக்கப் போகவில்லையாமே.

**உலக்கையார் பதில்:-** வாத்தியார் காதை முறுக்குவார் என்று தெரிந்து, நான் முன்பு எத்தனையோ நாள் வகுப்பிற்குப் போகாமல் இருந்திருக்கிறேன். மற்றவர்கள் 'ஏன் போகவில்லை' என்று கேட்டால், சரியான காய்ச்சல் என்று சாட்டுச் சொல்லுவேன். என் கேள்விக்குப் பதில் சொல்லாமல் இதென்ன? என்று கேட்பீர்கள். என்னவோ சொல்லத் தோன்றியது சொன்னேன். அவ்வளவுதான்.

**சல்லடையாரின் சலிப்பு * அவருக்கு வீட்டில ஏதாவது விசேம் இருந்திருக்குமுங்கோ.**

**3. உரலார் கேள்வி:-** நீண்டநாளாக உங்கள் மனதில் இருக்கும் ஒரு குறையைப் பற்றிச் சொல்லுங்களேன்?

**உலக்கையார் பதில் :-** அதற்கென்ன சொன்னால் போயிற்று! என் மனதில் இருக்கும் தமிழ்நாடு பற்றிய ஒரு குறையைப் பொதுவெளியில் சொல்ல வாய்ப்பளித்தமைக்கு முதலில் உங்களுக்கு நன்றிகள்.

இயல், இசை, நாடகம் என்று நம் தமிழை முக்கூறுகளாய்ப் பிரித்துள்ளார்கள். இது அனைவரும்; அறிந்த ஒன்றுதான். தமிழ் பிறந்த இடமென்னும் பெருமை தமிழ்நாட்டிற்கே உரியது. இடத்தால் விஸ்தீரணமாக இருப்பது, தமிழ் மக்கள் தொகையை அதிகம் கொண்டிருப்பது, அதனால் அறிஞர்களின் தொகையையும் அதிகமாய் வைத்திருப்பது, சினிமா, ஊடகங்கள், சஞ்சிகைகள் என ஏராளமான பிரச்சாரக் கருவிகளைத் தன்னகத்தே கொண்டிருப்பது என, பலவிடயங்களாலும் தமிழ் வாழும் இடங்களுள், இன்றும் தமிழ்நாடு தலைமை இடங்கொண்டிருக்கிறது. அதனால், இந்த மூன்று தமிழையும் ஒருமித்து வளர்க்கவேண்டிய பொறுப்பு தமிழ்நாட்டின் தலைமைப் பொறுப்பாகிறது.

ஆனால் அந்தப் பொறுப்பைத் தமிழ்நாடு சரியாக இயற்றவில்லை என்பதுதான் என் மனதில் இருக்கும் பெரிய குறை. முத்தமிழையும் சமப்பட வளர்ப்பதை விட்டுவிட்டுத் தங்களது தமிழிப்பற்றினை ஆட்சியாளர்கள் தேவையில்லாத விடயங்களில் காட்டிக் கொண்டிருக்கிறார்கள். தமிழ் வளர்ச்சியில் உள்ள உண்மைப் பிரச்சினைகளை இனங்காணாமல் தமிழ்நாடா? தமிழகமா? என்று, ஊருக்குப் பெயர் வைப்பதிலேயே காலங்கழித்துக் கொண்டிருக்கிறார்கள் அவர்கள்.

அங்குள்ள ஊடகங்கள் அனைத்தும் இசைத் துறைக்கும், நாடகத்துறைகளுக்கும் கொடுக்கும் முக்கியத்துவத்தை இயல்த்துறைக்கு வழங்குவதேயில்லை என்பதுதான் என்னுடைய மனதில் இருக்கும் பெரிய குறை.

'டிசம்பர் சீசனில்' அங்கு நடக்கும்; இசைவிழாக்களில் பெரிய பாடகர்கள், நடுத்தரப் பாடகர்கள், புதிய பாடகர்கள் என அனைவரும் பாட, அவர்களுடைய ஆற்றல் பற்றி விமர்சகர்கள் நவீனமாகவும் அதே நேரத்தில் ஆழமாகவும், சுவைபடவும் அச்சமின்றித் துணிந்து எழுதி வருகிறார்கள். முன்பு இக்காரியத்தை விமர்சகர் சுப்புடு செய்து வந்தார். இப்போது அதே காரியத்தை 'வீயெஸ்வி' போன்ற விமர்சகர்கள் செய்து வருகிறார்கள். சங்கீதம் தெரியாதவர்களைக் கூட வாசிக்க வைக்கும் சுஷ்வாயன எழுத்து 'வீயெஸ்வி' யினுடையது. இத்தகையவர்கள் தம் விமர்சனங்களால் போட்டுத் தாக்குகிற தாக்கில் பாடகர்கள் கூர் தீட்டப்படுகிறார்கள். அதனால் இசைத்துறை அன்று தொட்டு இன்று வரை தரம் குன்றாது இருந்து வருகிறது.

இன்று நாடகத்துறை, அங்கு சினிமாவாக வளர்ச்சி பெற்றுள்ளது. அத்துறையை எடுத்துக் கொண்டால்,




வெளிவரும் ஒவ்வொரு சினிமாவையும் சஞ்சிகைகளும், தொலைக்காட்சிகளும் ஆழமாய் ஆராய்ச்சி செய்து, அவற்றின் தகுதி அறிந்து விமர்சித்து, பரீட்சைகளுக்குப் புள்ளியிடுவது போல புள்ளிவேறு இடுகின்றன. இவ்விமர்சனங்கள் வெளிவரும் நல்ல சினிமாக்களையும், இயக்குனர்களையும், நடிகர்களையும் இனங்காட்டி ஊக்குவித்து வருகின்றன. அதுமட்டுமல்லாமல், அத்துறையின் தரம் குறையும் போது அவற்றை மிக வன்மையாகக் கண்டிக்கவும் அவை தவறுவதில்லை. இதனால், நாளுக்குநாள் நாடகத்துறையும் அங்கு வளர்ந்து கொண்டிருக்கிறது.

என்னவோ தெரியவில்லை. இயற்றுறைக்கு மட்டும் அங்கு புறக்கணிப்பு நடக்கிறது. அத்துறையைப் பற்றிக் கேட்பார் ஒருவரும் அங்கு இல்லை. அதனால் வாரியார் சுவாமிகள், கி.வா.ஜ, ம.பொ.சி, அ.ச.ஞானசம்பந்தன், புலவர் கீரன், பேராசிரியர் இரா.இராதாகிருஷ்ணன் போன்ற உயர்ந்த பேச்சாளர்களின் வரிசை மெல்ல மெல்ல நலிந்து, இன்று அவ் வரிசை முடிந்து போய்விட்டதோ? என எண்ணும்படியான நிலை தோன்றியிருக்கிறது.

அதனால் இன்று, தமிழ்நாட்டில் விளையாட்டுப் பட்டிமண்டபங்களும், நகைச்சுவைக் கும்மாளங்களும்தான் இயற்றுறை என்னும்படியான அவல நிலை ஏற்பட்டிருக்கிறது. முன்பெல்லாம் எம்.எஸ். அம்மா போன்ற மாபெரும் இசைமேதைகளும், சிவாஜிகணேசன் போன்ற மாபெரும் நாடகமேதைகளும்கூட அக்கால இயற்றமிழ் அறிஞர்களைக் கண்டால், இருக்கைவிட்டு எழுந்து மரியாதை செய்யும் அளவிற்கு இயற்றமிழ் தலை நிமிர்ந்து நின்றது.

இன்று சினிமா நடிகர்கள், இசைக்கலைஞர்கள் என எல்லோரும் பட்டிமண்டபங்களுக்குத் தலைமை தாங்கத் துணிந்துவிட்டார்கள். அவர்களின் கீழ் இயற்றுறைக் கலைஞர்கள் பேசி வருகிறார்கள். இந்த அவலத்திற்குக் காரணம் இயற்றமிழ்த்துறை முறைப்படி விமர்சிக்கப்பட்டு வளர்க்கப்படாததேயாம். இயற்றுறை நிகழ்ச்சிகளை அங்குள்ள ஊடகங்கள் ஏதும் கண்டு கொள்வதே இல்லை. நிகழ்ச்சிகளின் தரம், பேச்சாளர்களின் தரம் என்பவை பற்றி எவரும் எடுத்து ஆராய்ந்து உரைப்பதில்லை.

ஆழமான இயற்றுறை நிகழ்ச்சிகளும் அங்கு நடக்கத்தான் செய்கின்றன. சென்னை சேக்கிழார்; விழா, சென்னைக் கம்பன் விழா, ஈரோடு புத்தகக் கண்காட்சிச் சொற்பொழிவுகள், புதுவைக் கம்;பன் விழா, சேலம் மார்கழிப் பெருவிழா போன்ற இயற்றுறை நிகழ்ச்சிகள் இன்றும் தரமாய்த்தான் நடைபெற்று வருகின்றன. ஆனால் அதில் பேசும் பேச்சாளர்களின் தரம் பற்றியும், அவ்விழாக்களின் தரம் பற்றியும் கூட, மேற்சொன்ன ஊடகங்கள் எதுவும் மூச்சும் விடுவதில்லை.

அதனால் விமர்சிப்பார் எவருமின்றி, நேற்றுப் பெய்த மழைக்கு இன்றைக்கு முளைத்த காளான்களெல்லாம், தங்கள் விரிவை ஆலமர விரிவாய் அறிவித்து நிற்கின்றன. இப்படியே போனால் முத்தமிழுக்கும் தலைமை கொள்ள வேண்டிய இயற்றமிழின் கதி அதோ கதியாகத்தான் போகப் போகிறது. இதனை யாரும் தடுக்கமாட்டார்களா? என்ற குறைதான் இப்போதைக்கு என் மனதில் இருக்கும் பெரிய குறை.

**சல்லடையாரின் சலிப்பு * இவையளிட பேச்சுகளை விமர்சிக்க என்னதான் இருக்காம்?**

**4. உரலார் கேள்வி:-** ஜனாதிபதி இனப்பிரச்சினையைத் தீர்க்கப் போகிறாராமே. அவர் தரப்போகும் தீர்வு தமிழர்களைத் திருப்திப்படுத்தும் என்று நினைக்கிறீர்களா?

**உலக்கையார் பதில்:-** மேற்குநாட்டார் இலக்கங்களில் 13ஆம் இலக்கத்தைத் துரதிர்ஷ்டமான இலக்கம் என்று கருதுகிறார்கள். அதனால் பெரிய ஐந்து நட்சத்திர ஹோட்டல்களில் போடப்படும் 'லிப்ட்'களில் எல்லாம் 13ஆம் இலக்கத்தை அவர்கள் வைத்திருக்கமாட்டார்களாம். எங்கள் விதி இந்தியா கொண்டு வந்த தமிழருக்கு வாய்ப்பான திருத்தச் சட்டமும் 13ஆம் இலக்கத்திலேயே அமைந்து போனது. அதனால்த்தானோ என்னவோ இந்த 13ஆம் திருத்தச் சட்டம் இன்றுவரை பிரச்சினைக்குரியதாகவே இருந்து வருகிறது. என்னதான் முயன்றாலும் ஜனாதிபதி இந்தச் சட்டத்தைத் தாண்டிச் செல்வார் என்று தோன்றவில்லை.

**சல்லடையாரின் சலிப்பு * சும்மா இந்தக் கதைய விடுங்கோ! தரவேணும் எண்டு நினைச்சா பன்ரண்டாவது... பதின்மூண்டாவது...**

**5. உரலார் கேள்வி:-** பறக்கும் தட்டுகளின் வருகைபற்றி அமெரிக்கா வெளிப்படப் பேசத் தொடங்கியிருப்பதைப் பற்றிக் கவனித்தீர்களா?

**உலக்கையார் பதில்:-** கவனிக்காமல் என்ன? கடந்த நான்கைந்து வருடங்களுக்குள் மட்டும் இத்தகைய 300க்கு மேற்பட்ட பறப்புக்களைக் கவனித்திருப்பதாகவும், அவற்றுள் 180க்கு மேற்பட்டவை இனங்காண முடியாத பறப்புக்களாக இருப்பதாகவும் அவர்களே ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களால் எடுக்கப்பட்ட பறக்குந் தட்டுகளின் வீடியோப் படங்களும் லழரவரடிநகளில் உலாவருகின்றன.

அமெரிக்காவின் இந்த மௌனக் கலைப்பிலிருந்து 'ஏலியன்ஸின்' வருகை பூமியை அண்மித்துக் கொண்டிருக்கிறது என்பதை உணரமுடிகிறது. அண்மையில் மறைந்த விஞ்ஞானி ஸ்ரீபன் அவர்களின் எதிர்வுகூறல்களில் ஒன்றாக பூமியின் அழிவுக்குக் காரணமாக 'ஏலியன்ஸின்' வருகையும் இருக்கப்போகிறது எனும் செய்தியும் பதிவாகியிருக்கிறது. அதேபோலவே அண்மையில் வாழ்ந்து மறைந்த தீர்க்கதரிசிகளில் ஒருவராய்க் கருதப்படும் பாபா டாங்கோ அவர்களும் இந்த ஆண்டில் 'ஏலியன்ஸால்' பூமி அழிவை எதிர்கொள்ளும் என்றும் கூறியிருக்கிறார்.

ஊருக்கு ஊரும் நாட்டுக்கு நாடும் கண்டத்திற்குக் கண்டமும் சண்டைபிடித்ததுபோய் கிரகத்திற்குக் கிரகம் சண்டை நடக்கப்போகும் காலம் நெருங்கி வருகிறதுபோல.

**சல்லடையாரின் சலிப்பு * என்னவோ அவங்கள் வந்தால் நல்லதுதான். பேரிய சண்டை வந்தால் சின்னச் சண்டைகள் அடங்கிப் போகுமெல்லே.**

காலைக்கதிர் Kalaikkathir

# மறுசீரமைப்புக்கள் வேதனைக்குரியவையென ஏற்றுக் கொள்கின்றோம் நடைமுறைப்படுத்தாவிட்டால் பொருளாதாரம் மேலும் வீழ்ச்சியடையும்

## நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க வருத்தம்



நாட்டில் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள மறுசீரமைப்புக்கள் கடுமையானவையாகவும் வேதனைக்குரியவையாகவும் காணப்படுகின்றன என்பதை ஏற்றுக் கொள்கின்றோம். மறுசீரமைப்புக்கள் வலி மிக்கவையாகக் காணப்பட்டாலும் அவை நடைமுறைப்படுத்தப்படாவிட்டால் நாட்டின் பொருளாதாரத்தை மேலும் வீழ்ச்சியடையும் என்று நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும் போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ள மறுசீரமைப்புக்கள் , நாட்டின் நிலைமையை அடிப்படையாகக் கொண்டு அவதானிக்கும் போது மிகக் கடினமானவையாகவே உள்ளன என்பதை ஏற்றுக் கொள்கின்றோம். எவ்வாறிருப்பினும் வரி வருமானம் மிகக் குறைந்த மட்டத்தில் காணப்பட்டமையே நாட்டை இந்நிலைமைக்கு கொண்டு சென்றுள்ளது.

தேசிய பொறிமுறையின் கீழ் தற்போது நிலவும் நெருக்கடிகளை எவ்வாறு எதிர்கொள்வது என்பது தொடர்பில் அவதானம் செலுத்த வேண்டும். நாட்டில் கடந்த ஆண்டு நிலைமையை எவராலும் கட்டுப்படுத்த முடியாத நிலைமை ஏற்பட்டது. அதன் காரணமாகவே கடந்த ஆண்டில் சுமார் 6 மாதங்கள் மக்கள் பாரிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்.

எனவே இந்த நிலைமையிலிருந்து நாட்டை மீட்பதற்காக இதனை வலியுடனான மீளெழலாக அனைவரும் ஏற்றுக் கொள்ள வேண்டும். இந்த மறுசீரமைப்புக்கள் வலி மிக்கவையாகக் காணப்பட்டாலும், அதனை மேற்கொள்ளாமலிருப்பதானது , நாட்டின் பொருளாதாரத்தை மேலும் வீழ்ச்சியடைச் செய்யும்.

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட மறுசீரமைப்புக்களால் ஓரளவு ஸ்திரத்தன்மை ஏற்பட்டுள்ளதே தவிர முழுமையான ஸ்திரத்தன்மை ஏற்படவில்லை. எரிபொருள் உள்ளிட்டவற்றின் விநியோகத்தில் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. 12 மணித்தியாலங்களாகக் காணப்பட்ட மின் துண்டிப்பு இன்று 2 மணித்தியாலங்களாகக் குறைவடைந்துள்ளன.

அத்தியாவசிய பொருட்களுக்கான தட்டுப்பாடு இன்று படிப்படியாக குறைவடைந்து வருகிறது. பணவீக்கமும் குறைவடைந்து வருகிறது. இவை அனைத்தும் கடும் கட்டுப்பாடுகளுக்கு மத்தியிலேயே சாத்தியமாகியுள்ளன. இறக்குமதி கட்டுப்பாடுகள் இன்றும் நடைமுறையிலுள்ளன.

இந்த நிலைமைகள் வழமைக்கு திரும்புவதற்கு எமது தேசிய ரீதியிலும், சர்வதேச மட்டத்திலும் ஒத்துழைப்புக்கள் தேவைப்படுகின்றன. சர்வதேச நாணய நிதியத்தின் உதவி கிடைக்கப் பெறாவிட்டால், எமது நாட்டின் பொருளாதாரம் பாரதூரமாக வீழ்ச்சியடையும். – என்றார்.

### வடக்கு - கிழக்கிலிருந்து ..

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

பங்களிப்பைச் செய்து வருகின்றனர்.

அவர்கள், பௌத்த பிக்குகளுக்கும் உதவிகளை வழங்கி வருகின்றனர்.

எனவே, அந்த இடங்களில் இருந்து பாதுகாப்புப் படையினரை அகற்றுவது அந்த இடங்களின் வளர்ச்சிக்கு இடையூறாக அமையும் – என்று மூன்று பீடங்களின் மகாநாயக்க தேரர்கள் தமது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

### கரைத்துறைப்பற்று ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாக்கலின்போது முல்லைத்தீவு மாவட்டம்கரைத்துறைப்பற்றுபிரதேசசபையில் தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட வேட்பு மனு நிராகரிக்கப்பட்டது.

இதற்கு எதிராகவே இன்றைய தினம்உச்சநீதிமன்றில்றிட் மனுகோரும் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

அதிகாரமளிக்கப்பட்ட முகவர் அந்த வேட்புமனுவைக் கையளிக்காததன் காரணமாகவே வேட்புமனு நிராகரிக்கப்பட்டது. எனினும் அதிகாரமளிக்கப்பட்ட உறுப்பினர் மாவட்ட செயலகத்தின் தேர்தல் திணைக்களத்திலேயே அந்தச் சமயத்தில் நின்றிருந்திருந்தார் என்பதால் அவர் அவர் வேட்புமனுவைக் கையளிக்கவில்லை என்று கருத முடியாது என மனுதாரர் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் மனுதாரர்கள் சார்பில் ஆயராகவுள்ளார்.

### களவாடப்பட்ட அடகு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொது முகாமையாளர் ரி.எம்.டபிள்யூ. சூரியகுமார தெரிவித்துள்ளார்.

அடகு வைத்த நகைகளை மீட்க முடியாமல் பாதிக்கப்பட்டிருக்கும் வாடிக்கையாளர்களுடனான சந்திப்பின் போதே மக்கள் வங்கியின் பிரதிப் பொது முகாமையாளர் ரி.எம்.டபிள்யூ. சூரியகுமார இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மக்கள் வங்கியின் திருநெல்வேலி சேவை நிலையத்தில் அடகு வைக்கப்பட்ட ஒரு தொகுதி நகைகளை அங்கு பணியாற்றிய அதிகாரிஒருவர்கையாடிச் சென்று விட்டார் என்ற காரணத்தினால், கடந்த 2012 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல் அடகு வைக்கப்பட்ட தமது நகைகளை மீட்க முடியாத வாடிக்கையாளர்களுக்கும், வங்கி அதிகாரிகளுக்கும் இடையிலான சந்திப்பு இன்று (27) காலை, 09:30 மணியளவில் கன்னாதிட்டியில் அமைந்துள்ள பிராந்தியத் தலைமைக் காரியாலயத்தில் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில் மக்கள் வங்கியின் கிளை வலையமைப்புக்குப் பொறுப்பான பிரதிப் பொது முகாமையாளர் ரி.எம்.டபிள்யூ. சூரியகுமார, பிராந்திய முகாமையாளர், கே.கோடீஸ்வரன், பிராந்திய சட்ட அதிகாரி திருமதி எஸ்.சுகாஸ் மற்றும் பல்கலைக்கழகக் கிளை முகாமையாளர், திருநெல்வேலி கிளை முகாமையாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பாதிக்கப்பட்ட வாடிக்கையாளர்களிடம் பேசிய பிரதிப் பொது முகாமையாளர் அங்கு மேலும் தெரிவிக்கையில், மக்கள் வங்கிக் கிளை ஒன்றில் அடகு வைக்கப்பட்ட நகைகளை மீட்க முடியாமல் பாதிக்கப்பட்டிருக்கும் உங்கள் உணர்வுகளை நாங்கள் மதிக்கிறோம். இத்தனை வருடங்களாக பொறுமை காத்த உங்களுக்கான நல்ல செய்தி ஒன்றுடனேயே உங்களைச் சந்திக்கிறோம். மிகவும் துன்ப கரமாக நாங்கள் உணர்கிறோம். வங்கியின் அதிகாரிகள் விட்ட தவறுக்காக உங்களைப் பாதிப்படைய விட்டிருக்கக் கூடாது. சில சட்ட நடைமுறைகளின் காரணமாக உங்களுக்கு உடனடியாகத் தீர்வைத் தர முடியாத நிலையில் இருக்கிறோம். ஆனாலும், உங்களுக்கு விரைவாகத் தீர்வைப் பெற்றுத் தருவதற்காக வங்கி சில நகர்வுகளை மேற்கொண்டுள்ளது. இதுவரை காலமும் நீதவான் நீதிமன்றத்தில் நடாத்தப்பட்டுக்கொண்டிருந்த வழக்கு இப்போது உயர் நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டுள்ளது. உயர் நீதிமன்றத்தில் இந்த வழக்கு மீதான விசாரணைகள் எதிர்வரும் பெப்ருவரி 6 ஆம் திகதி இடம்பெறவுள்ளது. அந்த விசாரணை முடிந்ததும் இயலுமான அளவு விரைவாக வாடிக்கையாளர்களின் நகைகள் விடுவிக்கப்படும், அவ்வாறில்லாமல் தாமதமேற்படுமாயின் வங்கியின் தலைமைக் காரியாலய அதிகாரிகளுடன் பேசி நகைகளுக்கான இன்றைய சந்தைப் பெறுமதியைப் பெற்றுத்தர முயற்சிப்போம் என்று குறிப்பிட்டார்.

இதன் போது கலந்து கொண்ட வாடிக்கையாளர்கள் சார்பில், சம்பவம் இடம்பெற்று இத்தனை வருடங்களாக மக்கள் வங்கி அதிகாரிகள் பாராமுகமாகச் செயற்பட்டதுடன், வாடிக்கையாளர்கள் மீது காட்டமாக நடந்து கொண்ட சம்பவங்கள் குறித்தும் தமது கண்டனத்தையும் வெளிப்படுத்தினர். அத்துடன் ஒவ்வொருவரும் தத்தமது பிரச்சினைகளை வெளிப்படுத்தினர். கடந்த காலத்தில் இடம்பெற்ற அத்தனை சம்பவங்களுக்கும் வருத்தம் தெரிவித்த வங்கி அதிகாரிகள், தாங்கள் வாடிக்கையாளர்களுக்காகத் தம்மால் இயன்ற நடவடிக்கைகளை எடுப்போம் என்று உறுதியளித்துடன், அடகு நகை மோசடியினால் பாதிக்கப்பட்டுள்ள சுமார் 65 வாடிக்கையாளர்களுக்கும் அவர்களது நகைகளை விரைவில் மீளளிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்ற உறுதிப்பாட்டை எழுத்து மூலம் தருவதாகவும் உறுதியளித்தனர்.

இருந்தபோதிலும், வழமை போல காலங் கடத்தப்படாமல், எதிர்வரும் 6 ஆம் திகதி வழக்கு விசாரணைகளின் முன்னேற்றம் பற்றியும், வாடிக்கையாளர்களுக்கான அடுத்த கட்ட நடவடிக்கை பற்றியும் எதிர்வரும் 10 ஆம் திகதி வெளிப்படுத்தப்பட வேண்டும் என்று வாடிக்கையாளர்கள் கேட்டனர். வங்கி அதிகாரிகள் அந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொண்டனர்.

இந்த அடகு நகை மோசடி 2012 இல் இடம்பெற்ற போதிலும், இது வரை காலமும் அதிகாரிகள் வாடிக்கையாளர்களுடன் இத்தகைய சந்திப்பு எதனையும் மேற்கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

### செல்லப் பிராணிக்காக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்ற இளைஞரே சடலமாக மீட்கப்பட்டார்.

வீட்டில் செல்லப்பிராணியாக வளர்க்கப்பட்ட நாய் கிணற்றில் விழுந்தது. குறித்த நாயை மீட்பதற்காக இளைஞர் பாதுகாப்பற்ற கிணற்றில் தும்புக் கயிறைப் பயன்படுத்தி இறங்கினார்.

அதன்போது கயிறு அறுந்ததால் அவர் கிணற்றுக்குள் விழுந்தார்.

அவர் சேற்றில் மாட்டிக்கொண்டமையால் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

அயலவர்களின் உதவியுடன் கிணற்று நீர் இறைக்கப்பட்டு இளைஞரின் சடலம் மீட்கப்பட்டது.

சடலம், உடற்கூற்றுப்பரிசோதனைக்காக கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

### நாடாளுமன்றம் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதியால் அக்கிராசன உரை நிகழ்த்தப்படும்.

அந்தவகையில் நாடாளுமன்றத்தில் ஆற்றப்படும் அக்கிராசன உரையில் 75 ஆவது சுதந்திர தினக் கொண்டாட்டத்துடன் இணைந்ததாக நாட்டில் அமுல்படுத்தத் தீர்மானித்திருக்கும் புதிய கொள்கைகள், புதிய சட்டங்கள், 2023 – 2048 வரையான காலப்பகுதிக்குள் சுதந்திர தினத்தின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுவதற்கு ஏற்றவாறு நாட்டின் முன்னேற்றத்துக்காகக் கட்சி, நிறம், இனம்,மத பேதமின்றி கட்டாயமாக நடைமுறைப்படுத்த வேண்டிய வேலைத்திட்டம் தொடர்பான விடயங்கள் உள்ளடக்கப்படும் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

இறுதியாக நாடாளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத்தொடர் கடந்த வருடம் (2022) ஒக்டோபர் 27ஆம் திகதி நண்பகல் 12 மணியுடன் நிறைவுக்கு வருந்ததோடு, மீண்டும் நாடாளுமன்றம் 2023 நவம்பர் 16 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்குக் கூடியது என்பது குறிப்பிடத்தக்கது.

### கூலிப் படையின் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வன்முறைக் குழு ஒன்றின் காணொலிகள் சமூக வலைத் தளங்களில் வெளியாகிப் பரபரப்பை ஏற்படுத் தின.

இதையடுத்து அந்தக் காணொலியில் உள்ளவர்களைக் கைது செய்யும் நடவடிக்கையில் பொலிஸார் இறங்கினர். தாக்குதலில் ஈடுபட்ட முக்கிய குற்றவாளியை நேற்றுமுன்தினம் தாம் கைது செய்தனர் என்று பொலிஸார் அறிவித்திருந்தனர். அவரோடு இணைந்து செயற்பட்ட மற்றொருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டார்.

இந்த கூலிப் படைச் செயற்பாட்டில் ஈடுபட்ட மற்றைய நபர்கள் குறித்து அவர்களிடம் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

விளம்பரத் தொடர்புகளுக்கு - தொலைபேசி இலக்கம் 076 443 8622

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 28.01.2023இல் வெளியிடப்பெற்றது.

நேற்றைய மாலைப்பதிப்பு பக்கங்களும் இணைக்கப்பட்டுள்ளன.

பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kalaikkathir மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2054 தை 13 வெள்ளிக்கிழமை 27.01.2023 கதிர் 332

## தாயும் இரு பிள்ளைகளும் தீ விபத்தில் பரிதாப சாவு!

வீடொன்றில் ஏற்பட்ட தீ பரவலில் தாயும், இரண்டு பிள்ளைகளும் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் அநுராதபுரம் பகுதியில் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

2

# சமஷ்டி நிராகரிப்பு

## சர்வகட்சிக் கூட்டத்தில் ரணில் நேற்று பகிரங்கமாக அறிவிப்பு



கொழும்பு, ஜன 27

நான் சமஷ்டி (பெடரல்) ஆட்சி முறையை எதிர்க்கின்றேன். ஆனால், அதிகாரங்களைப் பகிரத் தயார்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

நேற்று வியாழக்கிழமை அவர் கூட்டிய சர்வகட்சிக் கூட்டத்தில் அவர் ஆற்றிய உரை ஜனாதிபதி செயலகத்தால் உத்தியோகபூர்வமாகத் தமிழில் வெளியிடப்பட்டுள்ளது.

7

## சஜித், அநுர, மைத்திரி, டலஸ் ரணிலின் கூட்டத்தில் இல்லை





ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று மாலை நடைபெற்ற சர்வகட்சி மாநாட்டை ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட பல எதிர்க் கட்சிகள் புறக்கணித்துள்ளன.

அதிகாரப்பகிர்வு தொடர்பில் கலந்துரையாடுவதற்காக நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கு ஜனாதிபதி நேற்று அழைப்பு விடுத்திருந்தார்.

எனினும், பிரதான எதிர்க் கட்சியான சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி, அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி, டலஸ் அழகப்பெரும தலைமையிலான சுதந்திர மக்கள் சபை, விமல் வீரவன்ச தலைமையிலான உத்தர லங்கா சபாவ, மனோ கணேசன்

2

## எல்லைமீறிய மீனவர்களின் 3 படகுகள் அரசுடமையாகின

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜன.27

இலங்கைக் கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்த சமயம் கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்ட இந்திய மீனவர்களின் மூன்று படகுகள் அரசுடமையாக்கப்பட்டன. படகுகளின் உரிமையாளர்கள் வழக்குத் தவணைகளுக்கு வருகை தராத காரத்தால் அவை அரசுடமையாக்கப்படுவதாக நீதிமன்றம் இன்று அறிவித்தது.

அத்துமீறிய சமயம் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் இரு நாட்டு இணக்கத்தின் அடிப்படையில் உடனடியாக விடுவிக்கப்பட்டபோதும் அவர்களின் உடமைகள் நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டிருக்கின்றன. அப்படி 17 மீன்பிடி படகுகள் தொடர்பான வழக்குகள் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ளன.

இந்தப் படகுகளின் உரிமையாளர்கள் பலரும் வழக்கு விசாரணைக்காக யாழ்ப்பாணம் வந்துள்ளனர். பலாலி விமான நிலையம் ஊடாக நேற்று அவர்கள் யாழ்ப்பாணம் வந்தனர். இன்று வழக்கு விசார ணைக்கு எடுக்கப்பட்ட போது 4 படகுகள் தொடர்பான விசாரணைகள் இடம்பெற்றன. மேலும் 4 படகுகளின் விசாரணைகள் 31ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. யாழ்ப்பாணம் நீரியல் வளத் திணைக்களத்தால் இந்தப் 17 படகுகள்

2

## மிளகாய் செய்கையை ஊக்குவிக்க கிழக்கில் 300 பேருக்கு உதவிகள்

### திட்டம் இன்று தொடக்கி வைப்பு



உலக வங்கி நிதி அனுசரணையில் திருக்கோவில் மற்றும் பொத்துவில் பிரதேசத்தில் மிளகாய் பயிரிடும் விவசாயிகளுக்கு பல கோடி ரூபாய் பெறுமதியான உதவிகளை வழங்கும் திட்டம் இன்று தொடக்கி வைக்கப்பட்டது.

விவசாய அமைச்சினால் கிழக்கு மாகாண விவசாய அமைச்சின் ஊடாக உலக வங்கியின் நிதி பங்களிப்புடன், நவீன விவசாய மயமாக்கலின் கீழ் திருக்கோவில் மற்றும் பொத்துவில் பிரதேச செயலகங்களுக்குட்பட்ட 300 பயனாளிகளை உள்ளடக்கி இந்தத் திட்டம் செயற்படுத்தப்படுகின்றது.

2

### ரூ. 80 லட்சம் செலவில்

## 8,000 பக்கதர்களுக்கு கச்சதீவு செல்ல அனுமதி





(ந.லோகதயாளன்)

கச்சதீவு புனித அந்தோணியார் தேவாலய வருடாந்த உற்சவம் மார்ச் மாதம் 3 மற்றும் 4ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளது. இந்த ஆண்டு உற்சவத்தில்

2

## சஜித், அநுர......

தலைமையிலான தமிழ் முற்போக்குக் கூட்டணி என்பன சர்வகட்சி கூட்டத்தைதில் பங்கேற்கவில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதானபங்காளிக்கட்சியானஇலங்கைத் தமிழரசுக் கட்சி மேற்படி சந்திப்பில் பங்கேற்றிருந்தாலும் கூட்டமைப்பின் ஏனையபங்காளிக்கட்சிகளானரெலோ, புளொட் என்பன பங்கேற்கவில்லை. அதேவேளை, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டார். ஆனால், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பங்கேற்கவில்லை.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, ஐக்கிய தேசியக் கட்சி உள்ளிட்ட அரச ஆதரவுக் கட்சிகளின் பிரதிநிதிகளும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உள்ளிட்ட சில எதிர்க்கட்சிகளின் பிரதிநிதிகளும் சர்வகட்சிக்கூட்டத்தில்கலந்துகொண்டனர்.

பிரதமர் தினேஷ் குணவர்த்தன, சபாநாயகர்மஹிந்தயாப்பாஅபேவர்தன, முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ச, மைத்திரிபால சிறிசேன, அமைச்சர்களான விஜயதாஸ ராஜபக்ச, பவித்ரா வன்னியாராச்சி, டக்ளஸ் தேவானந்தா, நாடாளுமன்ற உறுப்பினர்களான அத்துரலிய ரத்தன தேரர், திஸ்ஸ விதாரண, குமார வெல்கம, ராஜித சேனாரத்ன, வஜிர அபேவர்த்தன, துமிந்த திஸாநாயக்க, மஹிந்தானந்த அளுத்கமகே, எம்.ஏ.சுமந்திரன், ரவூப் ஹக்கீம், சி.வி. விக்னேஸ்வரன், சுரேன் ராகவன், சரத் வீரசேகர, சிவநேசத்துரை சந்திரகாந்தன், சாகர காரியவசம், டிரான் அலஸ், கெவிந்து குமாரதுங்க, ஏ.எல்.எம் அதாவுல்ல, ரிசாத் பதியுதீன், இம்ரான் மஹ்ரூப் உள்ளிட்டோர் மேற்படி கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

## தாயும் இரு......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றிரவு இவர்கள் உறங்கிக் கொண்டிருந்த அறையில் திடீரெனத் தீ பரவியது என்று தெரியவந்துள்ளது.

சம்பவத்தில் ஐந்து வயது சிறுவனும், பத்து வயது சிறுமியும், 30 வயதுடைய தாயுமே உயிரிழந்துள்ளனர்.

பிள்ளைகளையும் மனைவியையும் காப்பாற்றச் சென்ற 37 வயதுடைய கணவர், தீக்காயங்களுடன் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அருகில் உள்ள வீடொன்றிலிருந்து குறித்த வீட்டுக்கு மின்சாரம் பெறப்பட்டுள்ளது என்றும், அதில் ஏற்பட்ட மின் கசிவு தீ விபத்துக்குக் காரணமாக இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது. ஆனால் தீ பரவலுக்கான காரணம் கண்டறியப்படவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## 8,000 ஆயிரம்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

8 ஆயிரம் பக்தர்களை அனுமதிப்பது என்று இன்று யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் முடிவெடுக்கப்பட்டது.

இக் கூட்டத்தின்போது இந்தியத் தூதரக அதிகாரிகள் ராம் மகேஸ், பங்குத்தந்தை ஜெபரட்ணம் அடிகளார், வடக்கு மாகாண கடற்படைத் தளபதி தென்னக்கோன் மற்றும் யாழ். மாவட்ட தரைப்படைக் கடற்படைத் தளபதி, கடற்படை, தரைப்படை, பொலிஸ் அதிகாரிகள் எனப் பலர் பங்கு கொண்டிருந்தனர்.

இதற்கமைய இம்முறை இடம்பெறும் கச்சதீவுத் திருவிழாவின்போது இலங்கை பக்தர்கள் 4 ஆயிரத்து 500 பேருக்கும் இந்திய யாத்திரிகர்கள் 3 ஆயிரத்து 500 பேரும் பங்குகொள்ள அனுமதிக்கப்படுவர்.

இலங்கையின் தற்போதைய பொருளாதார நிலையில் விரும்பிய வகையில் செலவு செய்து உற்சவத்தை ஆடம்பரமாக மேற்கொள்ள முடியவில்லை என்று கூட்டத்தில் உரையாற்றிய மாவட்டச் செயலர் அ.சிவபாதசுந்தரன் தெரிவித்தார். இந்தியாவில் இருந்து இம்முறை 3 ஆயிரத்து 500 பக்தர்கள் எதிர் பார்க்கப்படுகின்றனர் என்று தெரிவித்த இந்தியத் தூதரக அதிகாரி, இதற்கான செலவுகளுக்கு இந்தியா முழுமையான ஒத்துழைப்பை வழங்கும் என்று தெரிவித்தார்.

கச்சதீவு திருவிழாவை நடத்தி முடிக்க சுமார் 80 லட்சம் ரூபாய் (7 மில்லியன் 915 ஆயிரத்து 700 ரூபா) செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

## எல்லைமீறிய......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பான வழக்குகளும் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

இவற்றில் 2021 ஆம் ஆண்டு பிடிக்கப்பட்ட 3 படகுகளின் உரிமையாளர்கள் இதுவரை நீதிமன்றில் முற்படவில்லை என்பது நீதிமன்றத்தில் சுட்டிக்காட்டப்பட்டது. இதையடுத்து அவற்றை அரசுடமையாக்கும்படி நீதிவான் கஜநிதிபாலன் கட்டளை பிறப்பித்தார். ஆறு படகுகளிற்கான விசாரணைகள் மார்ச் மாதம் முதலாம் திகதி இடம்பெறும் என்றும் இன்று விசாரணை முடிந்த 4 படகுகள் குறித்த தீர்ப்பும் மார்ச் மாதம் முதலாம் திகதி வழங்கப்படும் என்றும் நீதிவான் அறிவித்தார்.

## மிளகாய்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திட்டத்தின் கீழ் ஒவ்வொரு விவசாயிக்கும் 16 லட்சம் ரூபாய் பெறுமதியான விவசாய உபகரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. அதன் தொடக்க நிகழ்வு இன்று இடம்பெற்றது. விவசாயிகளுக்கு உதவிப் பொருட்கள் வழங்கப்பட்டன.

திருக்கோவில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன், பொத்துவில் பிரதேச செயலாளர் எம்.ஐ.பிர்னாஷ், விவசாய திணைக்கள பிரதிப் பணிப்பாளர் திசாநாயக்க, உதவிப் பணிப்பாளர் எஸ்.பரமேஸ்வரன் உள்ளிட்ட அதிகாரிகள் உதவிப் பொருட்களை வழங்கி வைத்தனர்.

முதல் கட்டமாக 100 விவசாயிகளுக்கு உழவு இயந்திரங்கள், உபகரணங்கள்,

உள்ளீடுகள் வழங்கப்பட்டன.

கோமாரி பகுதியைச் சேர்ந்த 150 விவசாயிகளுக்கும் தங்கவேலாயுதபுரம் பகுதியைச் சேர்ந்த 150 விவசாயிகளுக்கும் உதவிகள் வழங்கப்படுகின்றன என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

076 443 5622




# நமது பார்வை

மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000


## சட்ட ஆட்சியின் பலவீனம்

**நாடு பொருளாதார நெருக்கடியில் சிக்கிக்கொண்டுள்ள நிலையில் மக்களின் கைகளில் காசில்லை. அதை உழைப்பதற்கான வழி வகைகளும் இல்லை. அதனால் நகைகளை அடகு வைத்தும் கடன் வாங்கயுமே நாட்களைக் கடத்த வேண்டியவர்களாக உள்ளன. மாதாந்தச் சம்பளம் பெறமுடியாத தொழிலில் இருப்பவர்களும் கீழ் உழைப்புத் தொழிலாளர்களும் அன்றாட உழைப்பாளிகளும் இதில் மிக மோசமாகப் பாதிக்கபட்ட தரப்பினராக இருக்கின்றனர்.**

**அப்படிப்பட்டவர்கள் இலகுவில் அதிக வட்டிக்கு கடன் வாங்கிவிடுகிறார்கள். அவர்களால் வங்கிகளிடம் சென்று கடன் பெற முடிவதில்லை. பொருளாதாரம் நன்றாக இருக்கும்போது தேடித் தேடி கலைத்துக் கலைத்துக் கடன் கொடுக்கும் வங்கிகள் பொருளாதாரம் நலிந்த நிலையில் கடன் கொடுப்பதற்கு அதிக வட்டி கேட்பது மட்டுமல்ல, காசை வைப்பிலிடுங்கள் என்றுதான் அழைக்கின்றன. அதற்கும் மேலாக தவணைப் பணத்தை மாதா மாதம் சரியாகத் திருப்பிக் கட்ட முடியும் என்று நிரூபிப்பவர்களுக்குத்தான் கடன் கொடுக்கின்றன.**

**இத்தகைய சிக்கல்களால் எந்த உத்தரவாதமும் இன்றிக் கடன் கொடுப்பவர்களிடம் அதிக வட்டிக்குப் பணம் பெறுகின்றனர் ஏழைகள். வருமான இழப்புக் காரணமாகக் கடனை அவர்களால் திருப்பிச் செலுத்த முடிவதில்லை. அவர்களின் இத்தகைய கையறு நிலையைப் பயன்படுத்திக்கொண்டு கொள்ளையடிக்கும் கும்பல்களும் அவற்றுக்குத் துணையாக வளர்ந்து வரும் கூலிப் படைகள் குறித்த தகவல்களும் இப்போது வெளிவந்திருக்கின்றன.**

**இலங்கையில் பதிவு செய்யப்பட்ட நிதி நிறுவனங்கள் ஊடானவை தவிர்ந்த எந்தவொரு கடன் கொடுக்கல் வாங்கல்களும், சீட்டு போன்ற சேமிப்பு முறைகளும் சட்டத்திற்குப் புறம்பானவை. அத்தகைய கொடுக்கல் வாங்கல்களில் ஈடபடுவது தண்டனைக்குரிய குற்றம் இருப்பினும் மீற்றர் வட்டி, வட்டிக்கு வட்டி என்று சந்தைகள், வியாபார நிறுவனங்களை ஒட்டிய சட்டவிரோத கடன் முறைகள் நடைமுறையில் உள்ளன. அந்த ஒரு விதி மீறல் கடன வசூலிப்பதற்காக கூலிப்படைகளை வைத்து மிரட்டி காசைத் திரும்பப் பெறும் மற்றொரு சட்டவிரோத பண்பியல்பை வளர்த்திருக்கிறது என்பது கடந்த சில தினங்களாக வெளியாகிவரும் செய்திகளில் இருந்து தெரிகின்றது.**

**வட்டிப் பணத்தை திரும்பப் பெறுவதற்காக கூலிக்கு அமர்த்தப்பட்டவர்களால் அப்பாவிகள் அடித்தும், மிரட்டியும், மானபங்கப்படுத்தப்பட்டும் துன்புறுத்தப்படும் காட்சிகள் சமூக வலைத்தளங்களில் வேகமாகப் பரவியை அடுத்து பொலிஸார் சிலரைக் கைது செய்திருக்கின்றனர். இத்தகைய குற்றங்கள் இடம்பெறுவது பொலிஸாருக்குத் தெரியாததல்ல. பல சமயங்களில் கடைநிலைப் பொலிஸாரில் பலருமேகூட இந்த சட்டவிரோத வலையமைப்புக்களின் உதவியைப் பெற்றிருக்கிறார்கள். ஆனாலும் இவை சட்டவிரோத காரியங்களல்ல என்ற வகையில் மக்கள் மத்தியில் பொதுமைப்படுத் தப்பட்டிருப்பதாலேயே நிலமை இவ்வளவு தீவிரமடைந்திருக்கிறது.**

**சட்டத்தின் ஆட்சி தோற்றுப்போகும் இடங்களில்தான் இத்தகைய சட்டவிரோத செயல்கள் தலை தூக்குகின்றன. இவற்றைக் களைய குற்றவியல் நடவடிக்கைகள் மட்டுமல்ல சமூக, பொருளாதார நடவடிக்கைகளும்கூட அவசியம். கற்றறிந்தவர்களும் அதிகாரத்திலிருப்பவர்களும் அரசியல்வாதிகளும் இது குறித்துச் சிந்தித்துச் செயற்படவேண்டும்.**

## கடன் நெருக்கடி எதிர்கொள்ளும் நாடுகளுக்கு உதவுவதில் இலங்கைக்கு முன்னுரிமை அளிப்பு!

### ஜப்பான் அறிவிப்பு

கடன் நெருக்கடியை எதிர்நோக்கும் நாடுகளுக்கு உதவுவதில் இலங்கைக்கு முன்னுரிமை வழங்கப்படும் என ஜப்பானின் சர்வதேச விவகாரங்களுக்கான பிரதி நிதி அமைச்சர் மசாடோ கனிடா தெரிவித்துள்ளார்.

ரொய்டர்ஸ் செய்தி சேவைக்கு வழங்கியுள்ள விசேட செவ்வியின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். மேலும், நடுத்தர வருவாய் நாடுகளின் கடன் நெருக்கடிக்கு சர்வதேச தீர்வு இருக்க வேண்டும் எனவும் அவர் இதன்போது தெரிவித்துள்ளார்.

அத்தகைய நடவடிக்கைகளுக்காக ஜப்பான் பாரிஸ் கிளப் மற்றும் சர்வதேச நாணய நிதியம் போன்ற சர்வதேச அமைப்புகளுடன் நெருக்கமான ஒருங்கிணைப்பைப் பேணுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## ஆனந்த பாலித்த, தம்மிக்க சஞ்ஜீவ ஆகியோருக்குக் கிடைத்தது பிணை!




ஐக்கிய ஒன்றிணைந்த தொழிற்சங்க கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் ஆனந்த பாலித்த மற்றும் மின்சார பாவனையாளர்கள் சங்கத்தின் செயலாளர் தம்மிக்க சஞ்ஜீவ ஆகி யோர் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

நீதிமன்றத்தில் வியாழக்கிழமை முன்னிலைப்படுத்தப்பட்ட போதே பிணையில் செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி இருவரும் கடந்த 23ஆம் திகதி இரவு கொள்ளுப்பிட்டியில் கைது செய்யப்பட்டிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## தேர்தலுக்குச் செல்வது பொருத்தமானதா என சகலரும் சிந்தித்து பார்க்க வேண்டும்

### மதுர விதானகே கூறுகிறார்




தேர்தலுக்குச் செல்வது பொருத்தமானதா என சிந்தித்து பார்க்க வேண்டும் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் மதுர விதானகே தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பில் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தாங்கள் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்குத் தயாராகவே இருப்பதாகவும், எனினும், இப்போது நாடு இருக்கின்ற நிலையில் தேர்தலை ஒத்திப்போடுவதே சிறந்தது என அவர் தெரிவித்துள்ளார்.

அதில் மிஞ்சும் பணத்தை எடுத்து பொருளாதாரத் தேவைகளுக்குப் பயன்படுத்தலாம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தத் தேர்தலை மூன்று அல்லது நான்கு மாதங்களுக்கு ஒத்திப்போடுவது நல்லம் என்பதுதான் தனது நிலைப்பாடு எனவும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் மதுர விதானகே தெரிவித்துள்ளார்.

ஆகக்குறைந்தது 6 மாதங்களுக்கு தேர்தலை ஒத்திப்போட்டால் ஆயிரத்து 200 கோடி ரூபா நிதி மீதமாகும். அதை வைத்து எவ்வளவோ சேவை செய்யலாம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மக்கள் பொதுவாக எல்லா அரசியல் வாதிகளையும் வெறுக்கிறார்கள். இப்போதைய பொருளாதார நிலையின் கீழ் மக்கள் என்ன நிலைப்பாட்டில் இருக்கின்றார்கள் என்று சொல்ல முடியாது எனவும் அவர் கூறியுள்ளார்.

தனக்கு வாக்களித்த 70 ஆயிரம் மக்கள்கூட இப்போது என்ன முடிவெடுத்திருக்கின்றார்கள் என்று கூற இயலாது எனவும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் மதுர விதானகே தெரிவித்துள்ளார்.

சம்பளப் பிரச்சினை இருக்கின்றது. எரிபொருள் பிரச்சினை இருக்கின்றது. வைத்தியசாலைகளில் பிரச்சினை இருக்கின்றது. எல்லாப் பிரச்சினைகளையும் தீர்ப்பதற்குப் பணம் தேவைப்படுகின்றது.

இப்படியான ஒரு சூழ்நிலையில் தேர்தலுக்குச் செல்வது பொருத்தமானதா என்று யோசித்துப் பார்க்க வேண்டும்.

இந்தப்பிரச்சினையைப்பயன்படுத்தி ஆட்சியை பிடிப்பதை விடவும் மக்களின் பிரச்சினைகளை எப்படித் தீர்க்கலாம் என்றே எல்லோரும் சிந்தித்துப் பார்க்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## இலங்கையிலிருந்து நாடு திரும்பிய முன்னாள் எப்.பி.ஐ. அதிகாரி கைது!

அமெரிக்கஉள்ளகஉளவுப்பிரிவான எஃப்.பி.ஐயின் முன்னாள் உயர் அதிகாரி ஒருவர் இலங்கைக்கான பயணத்தை முடித்துக் கொண்டு திரும்பும் போது அமெரிக்காவில் கைது செய்யப்பட்டுள்ளார்.

அமெரிக்க புலனாய்வுப் பிரிவான எப்.பி.ஐ இன் முன்னாள் உயர் அதிகாரியான சார்ள்ஸ் மெக்கோனியல் என்பவரே இவ்வாறு அமெரிக்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அமெரிக்காவினால் தடை விதிக்கப்பட்ட ரஸ்ய கோடீஸ்வர வர்த்தகர் ஒல்க் டெரிபாஸ்கா என்பவருடன் தொடர்பு பேணியதாக மெக்கோனியல் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

மெக்கோனியல் ரஸ்ய தொழிலபதிருடன் இணைந்து செயற்பட்டுள்ளார் எனவும், இதன் அடிப்படையிலேயே கைது செய்யப்பட்டார் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட மெக்கோனியல் 5 லட்சம் டொலர் தனிப்பட்ட பிணையின் அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டார் எனத் தெரிவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

### மோடிக்கு எதிரான பிபிசி ஆவணப்படம்

# அரச தடையையும் மீறி கேரளாவில் திரையிடல்



இந்தியாவில் தடை செய்யப்பட்ட பிரதமர் நரேந்திர மோடி குறித்த பிபிசி செய்திச் சேவையின் ஆவண படத்தை கேரள தலைநகர் திருவனந்தபுரத்தில் காங்கிரஸ் கட்சி நேற்றுத் திரையிட்டது.

2002ஆம் ஆண்டில் குஜராத்தில் ஏற்பட்ட இந்து – முஸ்லிம் கலவரத்தில் பலர் கொல்லப்பட்டனர். அப்போது மாநில முதல்வராக நரேந்திர மோடி பதவி வகித்தார். கலவரத்தைத் தடுக்க அவர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று அவர் மீது தொடர்ச்சியாகக் குற்றச்சாட்டுக்கள் உள்ளன.

இந்தக் கலவரம் தொடர்பாக இங்கிலாந்து ஊடகமான பிபிசி, 2 பாகங்களாக ஆவண படத்தை வெளியிட்டிருக்கிறது.

இந்தியா–மோடிக்கான கேள்விகள் என்ற தலைப்பிலான அந்த ஆவண படத்தில் பிரதமர் மோடிக்கு எதிரான கருத்துகள் முன்வைக்கப்பட்டுள்ளன. பிபிசியின் ஆவண படத்தை சமூக வலைதளங்கள், பொது இடங்களில் வெளியிட மத்திய அரசு தடை விதித்துள்ளது.

இந்தச் சூழலில் காங்கிரஸ் கட்சி சார்பில் கேரள தலைநகர் திருவனந்தபுரத்தில் பிபிசி ஆவண படம் நேற்று மாலை பொது அரங்கில் திரையிடப்பட்டது. கேரளாவில் மார்க்சிஸ்ட் தலைமையிலான கூட்டணி அரசு பதவி வகிப்பதால், ஆவண படம் திரையிடப்படுவதை தடுக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## பாம்பு பிடிப்போருக்கு பத்மஸ்ரீ விருதுகள்



தமிழ்நாட்டைச் சேர்ந்த இரு பாம்பு பிடிப்பவர்களுக்கு இந்தியாவின் மதிப்பு மிக்க பத்மஸ்ரீ விருது வழங்கியுள்ளது இந்திய நடுவண் அரசு.

செங்கல்பட்டை அடுத்த சென்னேரியைச் சேர்ந்த பாம்பு பிடிக்கும் இருளர் இனத்தைச் சேர்ந்தவர்களான வடிவேலு மற்றும் மாசி ஆகியோருக்கே விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விருது இருளர் மக்களுக்கு கிடைத்த மிகப்பெரிய அங்கீகாரம் என பாம்பு பிடிக்கும் இருளர் தொழிலாளர்கள் பெருமிதம் தெரிவித்துள்ளனர்.

செங்கல்பட்டு மாவட்டம், மாமல்லபுரத்தை அடுத்த நெம்மேலி பகுதியில் இருளர் பாம்புபிடிப்போர் தொழில் கூட்டுறவு சங்கம் மூலமாக பாம்பு பிடிக்கும் சங்கம் இயங்கி வருகிறது. இந்தசங்கத்தில், 362 பேர் உறுப்பினர்களாக உள்ளனர்.

இதில் உறுப்பினர்களாக இருக்கும் இருவருக்கே விருது வழங்கப்பட்டுள்ளது. இவர்கள் விசப்பாம்புகளை பிடித்து நெம்மேலி பகுதியில் உள்ள பாம்பு பண்ணைக்கு வழங்குவார்கள். அங்கு அந்தப் பாம்புகளில் இருந்து விசம் எடுக்கப்பட்டபின்னர் அவை மீண்டும் வனப்பகுதிகளில் விடப்படும். இதனையே வடிவேலு மற்றும் மாசி தொழிலாகச் செய்து வருகின்றார்கள்.

மேலும், பாம்பு பிடிப்பதில் கைதேர்ந்த வடிவேலு, மாசி ஆகிய இருவரும் அமெரிக்கா, தாய்லாந்து போன்ற வெளிநாடுகளுக்குச் சென்று அங்குள்ள கொடிய விசம் உள்ள பாம்புகளை பிடித்து விசம் எடுத்து வந்தனர். அவர்களின் நீண்ட கால சேவையைப் பாராட்டி இந்த விருது அறிவிக்கப்பட்டிக்கின்றது.

# ரஷ்ய - உக்ரைன் போரில் மேற்கின் பங்களிப்பு தீவிரம்

### இப்படிச் சொல்கிறது ரஷ்யா



தங்கள் மீது தாக்குதல் நடத்துவதற்காக உக்ரைனுக்கு சக்திவாய்ந்த பீரங்கிகளை அனுப்புவதன் மூலம், இந்தப் போரில் மேற்கத்திய நாடுகளின் நேரடி பங்கேற்பு அதிகரித்துள்ளதாக ரஷ்யா குற்றம் சாட்டியுள்ளது.

இது குறித்து ரஷிய அரசின் செய்தித் தொடாபாளா டிமித்ரி பெஸ்கோவ் வியாழக்கிழமை தெரிவித்ததாவது:

உக்ரைனுக்கு பீரங்கிகள் உள்ளிட்ட அதிநவீன, சக்திவாய்ந்த, கனரக ஆயுதங்களை அனுப்புவது குறித்து ஐரோப்பிய நாடுகளின் தலைநகரங்களில் இருந்தும், அமெரிக்க தலைநகரில் இருந்தும் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. இது, உக்ரைன் போரில் அந்த நாடுகளின் நேரடி பங்கேற்பு அதிகரிப்பதைக் குறிக்கிறது.

ரஷ்யாவுக்கு எதிராகப் போரிட ஐரோப்பிய நாடுகளோ, நேட்டோ அமைப்போ எந்த உதவியை அளித்தாலும் அது போரில் நேரடியாக ஈடுபடுவதற்கு சமமாகும்.

அத்தகைய பங்கேற்பை அந்த நாடுகள் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே வருகின்றன – என்றார் அவர்.

முன்னதாக, ரஷ்யாவுக்கு எதிராகப் போரிட தங்களது சக்திவாய்ந்த லெப்பாட்–2 பீரங்கிகளை உக்ரைனுக்கு அனுப்பவிருப்பதாக ஜெமனி புதன் கிழமை அறிவித்தது.

முதல் கட்டமாக தங்கள் கைவசம் இருக்கும் 14 லெப்பாட் 2–ஏ6 ரக பீரங்கிகளை அனுப்பவிருப்பதாகவும், நட்பு நாடுகளுடன் இணைந்துமொத்தம் 88 பீரங்களை உக்ரைனுக்கு வழங்கவிருப்பதாகவும் ஜெமனி கூறியது.

அதற்கு முன்னதாக, தங்களது எம் 1அப்ரம்ஸ் ரக பீரங்கிகளை உக்ரைனுக்கு அனுப்புவதற்காக அந்த நாட்டுடன் பூர்வாங்க ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனா.

இது குறித்து செய்தியாளாகள் எழுப்பிய கேள்விக்கே டிமித்ரி பெஸ்கோவ் இவ்வாறு பதிலளித்தாா்.

ரஷ்யாவுக்கு எதிராக சண்டையிடுவதற்கு தங்களது அதிநவீன லெப்பாட்–2 பீரங்கிகளை மேற்கத்திய நாடுகள் அளித்து உதவ வேண்டும் என்று உக்ரைன் அதிபர் வொலோதிமீா ஸெலென்ஸ்கி தொடாந்து வலியுறுத்தி வருகிறாா்.

உக்ரைனுக்கு சக்திவாய்ந்த பீரங்கிகளை அனுப்பினால், அது தங்களுக்கும் ரஷியாவுக்கும் இடையிலான நேரடி மோதலுக்கு வித்திடலாம் என்று ஜெமனி அஞ்சியதால்தான் இந்த விவகாரத் தில் அது தயக்கம் காட்டி வந்தததாகக் கூறப்படுகிறது. எனினும், உக்ரைனுக்கு பீரங்களை அனுப்ப அமெரிக்க முடிவு செய்ததையடுத்து ஜெமனியும் அதற்கு சம்மதித்தது.

இந்த நிலையில், பீரங்கிகளை அனுப்புவது அந்த நாடுகள் சண்டையில் நேரடியாகப் பங்கேற்பதற்கு சமம் என்று ரஷியா எச்சரித்துள்ளது.

## கொரோனாத் தொற்றின் உச்சத்தை கடந்தது சீனா




கொரோனா பெருந்தொற்று ஏற்படுத்திய புதிய அலையின் உச்சத்தை சீனா கடந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. நாளாந்தம் புதிதாகத் தொற்றுக்குள்ளாவோர் மற்றும் உயிரிழப்போரின்எண்ணிக்கைகுறையத் தொடங்கியிருப்பதாகச் சீன அரசு தெரிவித்துள்ளது.

சீன அரசின் இந்த அறிவிப்பை நம்புவதற்கு மேற்குலகம் மற்றும் பன்னாட்டுச் சுகாதார அமைப்புகள் தயக்கம்காட்டி வருகின்றன. உண்மை நிலவரத் திற்கும்சீனஅரசுஅளிக்கும்புள்ளி விவரங்களுக்கும் இடையில் வேறுபாடு அதிகம் இருப்பது ஏன் என்று அவர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

சீன நாட்டின் நோய்கட்டுப்பாட்டு மையம் வெளியிட்டிருக்கும் தகவலில்,நாட்டில் கொரோனா தொற்றால் மருத்துவமனைகளில் சேர்க்கப்படுவோர் எண்ணிக்கை ஜனவரி முதல் வாரத்தில் உச்சத்தைத் தொட்டது, அதன்பிறகு பாதிப்பு குறைந்து வருகின்றது என்று தெரிவித்துள்ளது. தற்போது 70 சதவீதமாக அது குறைந்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனவரி முதல் வாரத்தில் கொரோனா பாதித்து உயிரிழுந்தவர்களின் எண்ணிக்கையும் மிகக் கடுமையாக இருந்ததாகவும், அதன்பிறகு குறைந்து வருவதாகவும் கூறப்பட்டுள்ளது.

கொரோனா பாதிப்பு உச்ச நிலையைக் கடந்துவிட்டதாகவும், கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டிருப்பதாகவும் சீனா தெரிவித்திருந்தாலும், பெரும்பாலான சர்வதேச வல்லுநர்களோ, சீனாவின் புள்ளிவிவரங்களை நம்பமுடியாது என்று கருத்துத் தெரிவித்துள்ளனர்.

## மேற்குக்கரை முகாமில் 9 பாலஸ்தீனர்கள் சாவு

### இஸ்ரேல் படைகளால் சுட்டுக்கொலை

மேற்குக் கரை பகுதியில் இஸ்ரேல் படையினர் வியாழக்கிழமை மேற்கொண்ட தேடுதல் வேட்டையில் 9 பாலஸ்தீனாகள் சுட்டுக் கொல்லப்பட்டனா.

இது குறித்து பாலஸ்தீன அதிகாரிகள் கூறியதாவது:

மேற்குக் கரையில் ஆயுதக் குழுவினரின் ஆதிக்கம் நிறைந்த ஜெனீன் அகதிகள் முகாமில் இஸ்ரேல் படையினா் வியாழக்கிழமை காலை தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனா.

மிகத் தீவிரமாக நடைபெற்ற இந்த தேடுதல் வேட்டையின்போது 60 வயது பெண் உள்பட 9 போ உயிரிழந்தனா.

இஸ்ரேல் பாதுகாப்புப் படையினருக்கும் பாலஸ்தீனாகளுக்கும் இடையே இந்த மாதத் தொடக்கம் முதல் பதற்றம் அதிகரித்துள்ளது.

அதையடுத்து இஸ்ரேல் படையினா் மேற்கொண்டு வரும் தேடுதல் வேட்டையில் இதுவரை 29 பாலஸ்தீனாகள் உயிரிழந்துள்ளனா.

இதில், வியாழக்கிழமை நடைபெற்ற தேடுதல் வேட்டையில்தான் ஒரே நாளில் அதிகம் போ உயிரிழந்த சம்பவமாகும் என்று கூறப்படுகிறது.

# தமிழ்மக்கள் தமிழரசுக் கட்சிக்குப் புகட்டும் பாடத்துடன் தலைக்கணம் நீங்கிக் கூட்டமைப்புடன் இணையவேண்டும்!

## கோவிந்தன் கருணாகரனின் ஆசை இது



தமிழ் மக்கள் தமிழரசுக் கட்சிக்கு ஒரு பாடத்தை புகட்ட வேண்டும். அதன் பின் தலைகணம் இல்லாத தமிழரசுக் கட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைய வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் 5 கட்சிகளின் கூட்டமைப்பான தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்களை அறிமுகப்படுத்தும் நிகழ்வில்கலந்துகொண்டுஉரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–தமிழ் மக்களுக்காக உயிர் நீத்த அத்தனைஆத்மாக்களும்உங்களை மன்னிக்காது என்பதை உணர்ந்து கொள்ளவேண்டும். ஆயுதப்போராட்ட இயக்கங்களில் இருந்து நீக்கள் வேறுபட்டதாக இன்று பிரசாரம் செய்கின்றீர்கள்.

2010 ஆம் ஆண்டுக்கு பின்பு அரசியலுக்கு வந்து இன்று தமிழ் மக்களுக்கும், உங்களது கட்சிக்கும், தலைமை தாங்க முயற்சிக்கும் விடுதலைப் போராட்டத்துக்கும் ஏதாவது தொடர்பு இருகின்றதா. இந்த மக்களுக்காக ஒரு நாளாவது பட்டினி கிடந்துள்ளீர்களா?

காயப்பட்ட போராளிகளின் இரத்தத்தையாவது கண்டிருப்பீர்களா அல்லது அவர்களை தூக்கியிருப்பீர்களா? மக்களுக்கான ஒரு தீர்வு வரும் போது, 100 வீதம் நிதானமாக சிந்தித்து முடிவு எடுக்க முடியாத நீங்கள் தனித் தனியாக தேர்தலை சந்திக்க சொல்கின்றீர்கள். நீங்கள் பிரிந்து செல்வதால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அழிந்து விடாது.

20010 கஜேந்திரகுமார் அணி வெளியேறிய போதும், 2015 இல் ஈ.பி.ஆர்.எல்.எவ். வெளியேறிய போதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூட்டமைப்பாகத் தான் பயணித்து.

இன்று தமிழரசுக் கட்சி வெளியேறுவதால்தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு அழிந்து விடாது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பெயரை மற்றவர்கள் பயன்படுத்தக் கூடாது எனக் கூறுகின்றீர்கள்.

ஆனால் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அப்படிக் கூறவில்லை. சுரேஸ் பிறேமச்சந்திரன் அப்படிக் கூறவில்லை. ஆனால்எப்படிஉங்களால்கூறமுடியும். நாங்கள் முக்கியமான தீர்வை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றோம். இலங்கைபொருளாதாரநெருக்கடிக்குள் சிக்கித் தவிக்கிறது. சர்வதேசத்தின் உதவியை நாடியிருக்கின்றது.

இந்தியா பெரும் அழுத்தத்தைக் கொடுக்கிறது. 13 ஆவது திருத்தச் சட்டத்தை முற்று முழுதாக அமுல்படுத்தி மாகாண சபைத் தேர்தலை நடத்த அழுத்தம் கொடுக்கிறது. மெல்ல மெல்ல இலங்கை அரசு அதை நோக்கி நகர்கின்றது. எங்களுடன் பேசுவதற்கான காலங்கள் கனிந்து வருகின்றன. நாங்கள் பிரியக் கூடாது. ஒற்றுமையாக இருக்க வேண்டும். தேர்தலின் பின் இணைந்து செயற்படுவோம் என்கிறார்கள்.

அதில் எந்த பிரச்சினையும் இல்லை. ஆனால் தமிழ் மக்கள் தமிழரசுக் கட்சிக்கு ஒரு பாடத்தை புகட்ட வேண்டும். அதன் பின் தலைகணம் இல்லாத தமிழரசுக் கட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைய வேண்டும். – எனத் தெரிவித்தார்.

# தகாத தொழில்களில் ஈடுபடுபவர் போன்று மனைவியை நடிக்கச்செய்து பண மோசடி!

## கணவர் உட்பட நால்வர் கைது

தகாத தொழில்மேற்கொள்வது போல் மனைவியை நடிக்கச் செய்து பல்வேறு நபர்களிடம் பண மோசடியிட்ட சம்பவம் தொடர்பில் கணவன் உட்பட நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர் என எகொடஉயன பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேற்படிபெண்ஆண்களை ஏமாற்றி, ஆள்கள் நடமாட்டம் இல்லாத இடங்களுக்கு அழைத்துச் சென்ற பின் பெண்ணின் கணவர் உட்பட கும்பல் ஒன்று அவர்களின் தங்க நகைகள் மற்றும் கைத்தொலைபேசிகள் என்பவற்றைக் கொள்ளையிட்டு வந்துள்ளது.

இது தொடர்பில் கிடைத்த முறைப்பாட்டின் பிரகாரம், சந்தேகநபர் ஒருவரை விசாரணை செய்தபோது, கொள்ளையில் ஈடுபட்ட பெண், அவரது கணவர் நண்பர் மற்றும் நண்பரின் தாயார் உட்பட நால்வர் கைது செய்யப்பட்டனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். கொள்ளையிடப்பட்ட பெறுமதியான பொருள்களை அடகு வைத்து பணத்தைப் பெறச் சென்ற போதே சந்தேகநபர் ஒருவரின் தாய் கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்துள் ளனர்.

இந்தகொள்ளைச்சம்பவம் தொடர்பில் மொரட்டுவை பொலிஸாருக்கும் ஏற்கனவே முறைப்பாடுகள் கிடைத்துள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஓட்டோ சாரதிகளால் அசௌகரியங்களுக்கு வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் ஆளாகின்றனர்!

நாட்டுக்கு வருகை தருகின்ற வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள், ஓட்டொ சாரதிகளால் பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளாகுகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்காரணமாக சுற்றுலாப் பயணிகளை ஏற்றிச்செல்லும் ஓட்டோக்களைப் பதிவு செய்யும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படும் எனவும் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் பிரியந்த பெர்னாண்டோ குறிப்பிட்டுள்ளார்.

வெளிநாட்டவர்களின் பாதுகாப்பிற்காக சுற்றுலா பொலிஸாருடன் இணைந்து ஒன்றிணைந்த வேலைத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# மது வரி கட்டளைச் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ள முடிவு!

மது வரி கட்டளைச் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

தற்போதைய மதுவரி கட்டளைச்சட்டத்தின்சிக்கலான தன்மையால் பல பிரச்சினைகள் எழுந்துள்ளன எனவும், மேற்படி சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.



# திருக்கேதீஸ்வர ஆலய மகா சிவராத்திரி ஏற்பாடு தொடர்பாக அரச அதிபர் தலைமையில் ஆராய்வு!

மஹாசிவராத்திரிதினத்தை முன்னிட்டு பாடல் பெற்ற திருத்தலமான மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தில் எதிர் வரும் 18 ஆம் திகதி சிவராத்திரி தினத்தை சிறப்பாக முன்னெடுக்கும் வகையில் மன்னார் மாவட்ட செயலகத்தில் மன்னார் அரசாங்க அதிபர் ஏ.ஸ்டன்லிடிமல்தலைமையில் விசேட கலந்துரையாடல் இடம் பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் திருக்கேதீஸ்வர ஆலய திருப்பணி சபை செயலாளர் லயன் சிவசம்பு ராமகிருஷ்ணன் மற்றும் அதன் பிரதிநிதிகள் , அரச தனியார் திணைக்களின் தலைவர்கள்,போலீஸ், இராணுவம் உயர் அதிகாரிகள், தொண்டு நிறுவன பிரதிநிதிகள் உட்பட அழைக்கப்பட்ட பிரதிநிதிகள் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

கடந்த காலங்களில் நோய் தொற்று காரணமாக சிவராத்திரி தினம் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் யாத்திரிகர்கள் வருகை குறைக்கப்பட்டு பல சுகாதார கட்டுப்பாட்டுக்கு மத்தியில் சிவராத்திரி தினம் இடம் பெற்றது.

மன்னார் திருக்கேதீஸ்வர திருத்தலத்தில் சிவராத்திரி தினத்தில் பல லட்சம் யாத்திரிகர்கள் வருகை தர உள்ள நிலையில் ஏற்பாடுகள் முன்னெடுப்பது தொடர்பாக் கலந்துரையாடப்பட்டது.

இதற்கான சகல ஏற்பாடுகளும் முன் ஆயுதங்களும் குறிப்பாக சுகாதாரம், போக்குவரத்து ,பாதுகாப்பு, குடிநீர் ,உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பாக ஆராயப்பட்டது.

அதற்கான ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட உள்ளது. இவ்விடயங்கள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# யாழ். பல்கலை பேரவைக்கு மேலும் 5 உறுப்பினர்கள்

யாழ். பல்கலைக்கழகப் பேரவைக்கான வெளிவாரி உறுப்பினர்களாக மேலும் 5 பேர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால்நியமிக்கப்பட்டுள்ளனர்.

பேரவையின் வெளிவாரி உறுப்பினர்களாகப் பதவி வகித்தவர்களின் பதவிக் காலம் கடந்த 15 ஆம் திகதியுடன் முடிவடைந்ததைத் தொடர்ந்து, கடந்த 16 ஆம் திகதி முதல் அடுத்துவரும் மூன்றாண்டு காலத்துக்கு 9 வெளிவாரி உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். அதன் பின்னர் மேலும் 5 உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றனர் என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க அறிவித்துள்ளார்.

தெல்லிப்பழை துர்காதேவி தேவஸ்தானம், சிவபூமி அறக்கட்டளை ஆகியவற்றின் தலைவர் கலாநிதி செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன், ஓய்வுபெற்ற பணிப்பாளர் நாயகம் வி.கனகசபாபதி, லங்கா சஸ்ரெயினபிள் வென்ஜஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் குலேந்திரன் சிவராம், வடக்கு உணவு நிறுவனத்தின் ஸ்தாபகரும், பணிப்பாளருமான கபிலன் கருணானந்தன் மற்றும் யாழ். ஆயர் இல்லத்தைச் சேர்நத வண. கலாநிதி பி.ஜே. ஜெபரட்ணம் ஆகியோரே உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான கடிதங்கள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குத் தலைவர் அறிவித்துள்ளார்.



# இந்திய கலப்பு இணை இறுதியில் தோல்வி

ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் கலப்பு இரட்டையர் போட்டியில் இந்தியாவின் பிரபல வீராங்கனை சானியா மிர்ஸா மற்றும் போப்பண்ணா இணை பிரேஸில் நாட்டு இணையிடம் தோல்வியடைந்தனர். இத்துடன் தனது கிரான்ட்ஸ்லாம் போட்டிகளில் இருந்து சானியா ஓய்வு பெற்றார்.

மெல்போர்னில் நடைபெற்று வரும் ஆஸ்திரே லிய ஓபன் போட்டியில் மகளிர் இரட்டையர் பிரிவில் 2வது சுற்றில் தோல்வியடைந்த இந்தியாவின் சானியா மிர்சா, கலப்பு இரட்டையர் பிரிவில் இந்தியாவின் ரோஹன் போபண்ணாவுடன் இணைந்து விளையாடினார்.

அரையிறுதிச் சுற்றில் சானியா மிர்சா - ரோஹன் போபண்ணா ஜோடி, அமெரிக்க, இங்கிலாந்து ஜோடியான டிசிரே - ஸ்குப்ஸ்கியை 7-6(5), 6-7(5), 10-6 எனக் கடுமையான போராட்டத்துக்குப் பிறகு வீழ்த்தியது. இதனால் இந்தியர்கள் இருவரும் கலப்பு இரட்டையர் இறுதிச்சுற்றுக்கு முன்னேறினார்கள்.

இந்நிலையில் இன்று நடைபெற்ற இறுதிச்சுற் றில் பிரேசில் நாட்டைச் சேர்ந்த ஸ்டெஃபானி- மாடோஸ் ஜோடி, சானியா மிர்சா - ரோஹன் போபண்ணா ஜோடியை 7-6(2), 6-2 என வீழ்த்தி பட்டம் வென்றது. இதையடுத்து இத்துடன் கிராண்ட் ஸ்லாம் போட்டிக்கு விடை கொடுத்துள்ளார் சானியா மிர்சா.

பெப்ரவரி மாதத்துடன் டென்னிஸ் விளை யாட்டிலிருந்து ஓய்வு பெறுவதாக சானியா மிர்சா சமீபத்தில் அறிவித்தார். ஆறு கிராண்ட் ஸ்லாம் பட்டங்களை வென்றவர் 35 வயது சானியா மிர்சா. பெப்ரவரி 19 முதல் நடைபெறவுள்ள துபை டென்னிஸ் சாம்பியன்ஷிப் போட்டியில்விளையாடிவிட்டுடென்னிஸிலிருந்து ஓய்வு பெறுவதாக சானியா மிர்சா அறிவித்துள்ளார்.

# ஆஸியுடனான டெஸ்ட் தொடரை வெல்ல கோலியின் திறன் முக்கியம்

## கங்குலி தெரிவிப்பு

இந்தியா மற்றும் ஆஸ்திரேலியா கிரிக்கெட் அணிகளுக்கு இடையிலான பார்டர்-கவாஸ்கர் டெஸ்ட் பெப்ரவரி 9ஆம் திகதி இந்தியாவில் தொடங்குகின்றது. இந்தத் தொடரை இந்தியா வெல்லவேண்டுமாயின் அதற்கு கோலியின் சிறப்பான ஆட்டம் அவசியம் என்று முன்னாள் அணித் தலைவர் கங்குலி தெரிவித்தார்.

கோலி டெஸ்ட் ஆட்டங்களில் தனது ஆட்டத் திறனை இன்னும் மெருகேற்றிக்கொள்வதன் மூலமே பெரிய வெற்றிகளை அடைய முடியும் என்றார் அவர்.

இரு நாடுகளுக்கும் இடையிலான டெஸ்ட் தொடர் சர்வதேச கிரிக்கெட் சபையின் டெஸ்ட் உலகக் கோப்பைப் போட்டிக்கான லீக் ஆட்டங்களாகவும் கருதப்படும் என்பதால், இந்தத் தொடரில் மூன்று போட்டிகளில் வென்றால் மட்டுமே இந்தியா உலக டெஸ்ட் இறுதிப் போட்டிக்குச் செல்ல முடியும்.

இறுதிப் போட்டியில் விளையாடுவதை ஆஸ்திரேலியா ஏற்கனவே உறுதி செய்துவிட்டது. இத்தொடரில் இந்தியா வென்று 2023 டெஸ்ட் சாம்பியன்ஷிப் பைனலில் மீண்டும் ஆஸ்திரேலி யாவுடன் மோதும் என்று நம்புகிறார் என்றும் கங்குலி தெரிவித்தார்.

சமீபத்திய இலங்கை மற்றும் பங்களா தேஷுக்கு எதிரான தொடர்களில் கோலி மிகச் சிறப்பாக ஆடினார். இருப்பினும் டெஸ்ட் கிரிக்கெட்டில் இன்னும் அவர் முன்னேற வேண்டியுள்ளது. ஏனெனில் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான தொடரில் இந்தியா தனது வெற்றிக்கு அவரை மிகவும் நம்பி இருக்கிறது. மறுபுறம் வலுவான ஆஸ்திரேலிய அணி சவாலைக் கொடுக்கும் என்பதால் இத்தொடர் சரவெடியாக இருக்கும் என்று நம்புகிறேன். இத்தொடரில் இரு அணிகளுமே கடுமையாகப் போட்டியிடும் என்று எதிர்பார்க்கிறேன். ஏனெனில் 2 அணிகளுமே தரமானதாக உள்ளன. மேலும் இந்த 2 அணிகளும் டெஸ்ட் சாம்பியன்ஷிப் பைனலில் விளையாடுவதற்கு அதிக வாய்ப்புகளும் உள்ளது என்று கூறினார்.

# சிறந்த வீரர்கள் ஐசிசி விருதுகள் அறிவிப்பு




2022ஆம் ஆண்டுக்கான சிறந்த வீரர், வீராங்கனை மற்றும் சிறந்த நடுவர்களுக்கான விருதுகளை அறிவித்துள்ளது சர்வதேச கிரிக்கெட் சபை (ஐசிசி)

அதிசிறந்த ஒரு நாள் கிரிக்கெட் வீரருக்கான சேர் ஜோன் கார்பீல்ட் விருதை பாக்கிஸ்தான் அணியின் தலைவர் பாபர் அசாம் பெற்றுள்ளார். இந்த விருதை பாபர் வெல்வது இது இரண்டாவது தடவை.

வருடத்திற்கான அதிசிறந்த ரி20 கிரிக்கெட் வீரருக்கான விருதை இந்தியாவின் சூர்யகுமார் யாதவ் பெற்றுள்ளார்.

சிறந்த டெஸ்ட் கிரிக்கெட் வீரருக்கான ஐ.சி.சி விருதை இங்கிலாந்து அணித் தலைவர் பென் ஸ்டோக்ஸ் தன்வசப்படுத்தியுள்ளார்.

சிறந்த நடுவராக இங்கிலாந்து நாட்டின் ரிச்சர்ட் இலிங்வேர்த் ஐ.சி.சியினால் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

வருடத்திற்கான அதிசிறந்த ஒருநாள் கிரிக்கெட் வீராங்கனையாக இங்கிலாந்து அணியின் நட்டாலி சிவரையும், ரி20 வீராங்கனையாக அவுஸ்திரேலிய அணியின் தஹிலா மெக்ராவையும் ஐ.சி.சி அறிவித்துள்ளது.






## சமஷ்டி......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

“நான் 13ஆவது அரசமைப்பு திருத்தம் தொடர்பில் நீதியரசர் குழாம் முன்வைத்துள்ள தீர்ப்புக்கமையவே செயற்படுகின்றேன். விசேடமாக பிரதம நீதியரசர் பாலிந்த ரணசிங்கவின் தீர்ப்பிற்கமையவே செயற்படுகிறேன். இதனை வரையறுத்துப் பார்த்தால், நாம் ஒற்றையாட்சியில் இருக்கின்றோம். நான் பெடரல் ஆட்சி முறையை எதிர்கின்றேன். ஆனால் அதிகாரங்களைப் பகிரத் தயார்” என்று ரணில் உரையாற்றினார் என்று ஜனாதிபதி செயலக செய்திக் குறிப்புத் தெரிவிக்கின்றது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நிறைவேற்று அதிகாரம் கொண்டவர் என்ற அடிப்படையில் தற்போதுள்ள சட்டத்தை நடைமுறைப்படுத்த நான் கட்டுப்பட்டுள்ளேன். அந்த வகையில் 13ஆவது அரசியல் திருத்தச் சட்டம் கடந்த 37 ஆண்டுகளாக எமது சட்டப் புத்தகத்திலும் அரசியலமைப்பிலும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

நான் அதனை நடைமுறைப்படுத்த வேண்டும். நான் அதனை நடைமுறைப் படுத்தாமல் இருக்க வேண்டுமாயின் பாராளுமன்றத்தில் யாராவது 22ஆவது மறுசீரமைப்புச் சட்டத்தைக் கொண்டு வந்து, 13ஆவது திருத்தத்தை நீக்க வேண்டும். அப்படி இல்லையெனில், 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும். 13ஆவது திருத்தச்சட்டத்தைநடைமுறைப்படுத்தாமலும், நீக்காமலும் எமக்கு இவற்றுக்கிடையே நிற்க முடியாது.

13ஆவது அரசியலமைப்பு திருத்தச் சட்டத்தை ரத்துச் செய்யுமாறுக் கோரி பாராளுமன்றத்தில் யார் வேண்டுமானாலும் தனிப்பட்ட பிரேரணையை முன்வைக்க முடியும். அதற்குப் பெரும்பான்மையானவர்கள் எதிர்ப்பைத் தெரிவித்தால் என்ன செய்வது? அப்படியானால் 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த நேரிடும்.

நான் 13ஆவது அரசியலமைப்பு திருத்தம் தொடர்பில் நீதியரசர் குழாம் முன்வைத்துள்ள தீர்ப்புக்கமையவே செயற்படுகின்றேன். விசேடமாக பிரதம நீதியரசர் பாலிந்த ரணசிங்கவின் தீர்ப்பிற்கமையவே செயற்படுகிறேன்.

இதனை வரையறுத்துப் பார்த்தால், நாம் ஒற்றையாட்சியில் இருக்கின்றோம். நான் பெடரல் ஆட்சி முறையை எதிர்கின்றேன். ஆனால் அதிகாரங்களைப் பகிரத் தயார்.

எமது மாகாண சபைகளுக்கு லண்டன் நகரசபைக்குள்ள அதிகாரங்கள் கூட இல்லை. லண்டன் நகர சபைக்கு இதனை விடவும் அதிகாரங்கள் உள்ளன. எனவே இதனை பெடரல் இராச்சியம் எனக் கூறமுடியாது. இதனை பெடரல் இராச்சியமாவதைத் தவிர்க்க, ஜே.ஆர் ஜயவர்தன அவர்கள் சட்டத்தரணிகளுடன் இணைந்து பல நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தார். இதுவரை நாட்டில் தெரிவு செய்யப்பட்ட அனைத்து ஜனாதிபதிகளும் 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தவே தீர்மானித்தனர். இதனை இனிமேலும் நடைமுறைப்படுத்தவில்லையெனில், நாம் அதனை அரசியலமைப்பில் இருந்து நீக்க வேண்டும்.

யுத்தம் முடிவடைகின்றபோது பெருமளவிலான காணிகள் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இருந்தன. பின்னர் அவை முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜப மற்றும் மைத்திரிபால சிறிசேன ஆகியோரால் பொதுமக்களிடம் மீள கையளிக்கப்பட்டன. முன்னாள் ஜனாதிபதியான மைத்திரிபால சிறிசேனவின் ஆட்சிக்காலத்திலேயே யாழ்ப்பாணத்தில் அதிகமான காணிகள் மக்களிடம் கையளிக்கப்பட்டன. தற்போது சுமார் 3000 ஏக்கர் வரையான காணிகளே மீள ஒப்படைக்கப்பட வேண்டியுள்ளது.

பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படாத வகையில் எஞ்சிய காணிகளையும் பகிர்ந்தளிப்பதற்கான பொறுப்பை நாம் பாதுகாப்புத் தரப்பினரிடம் கையளிக்க வேண்டும். அவர்கள் முன்வைக்கும் ஆலோசனைகளுக்கமைய அவ்விடயம் தொடர்பில் நாம் செயற்பட வேண்டும். பாதுகாப்புச் செயலாளர், பாதுகாப்புப் படைகளின் பிரதானி, முப்படைகளின் தளபதிகள் ஆகியோருடன் கலந்துரையாடியே நாம் காணிகளைப் பகிர்ந்தளித்தோம்.

அத்துடன், காணி ஆணைக்குழுவை நாம் விரைவில் நியமிக்க வேண்டும். அதற்கான சட்டமூலத்தை எதிர்வரும் மார்ச் மாதமளவில் நாம் பாராளுமன்றத்தில் சமர்பிக்க வேண்டும். இதில் மாகாண ரீதியில் 09 பேரை நியமிக்குமாறு அரசியலமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளது. மேலும் 12 பேர் ஜனாதிபதியால் நியமிக்கப்படுவர். அதன் பின்னர் தேசிய காணி கொள்கையொன்றும் அறிமுகம் செய்ய வேண்டும். அப்போது காணி ஆணைக்குழுவால் தேசிய காணிக் கொள்கையை நடைமுறைப்படுத்த முடியும். நாட்டின் 30 சதவீத்த்திற்கும் அதிகமான காணிகள் வனப்பிரதேசத்துக்காக ஒதுக்கப்பட்டுள்ளன. எவ்வித முறையான திட்டமும் இல்லாமலேயே காணிகள் அவசரமாக வனங்களாக உள்வாங்கப்பட்டுள்ளன. மலையகம், மகாவலி கங்கை, களனி கங்கை, களு கங்கை உள்ளிட்ட அனைத்து ஆறுகள் ஆரம்பமாகும் இடங்களிலும் நாம் வனங்களை இழந்துள்ளோம். எவ்வாறாயினும் நாம் வனங்களை அதிகரிக்க வேண்டும். எனவே நாம் உருவாக்கும் தேசியக் கொள்கையடிப்படையில் வனப்பகுதியை 30 சதவீதமாக அதிகரிக்க வேண்டும். இதற்கான காணிகளைக் கண்டறியும் பொறுப்பை நாம் காணி ஆணைக் குழுவிடம் ஒப்படைப்போம். இதற்காக நானும் அர்ப்பணிப்புடன் செயற்படுவேன்.

மாகாண பொலிஸ் ஆணைக்குழுவுக்கு பதிலாக தேசிய பொலிஸ் ஆணைக்குழுவொன்றை நியமிப்பதற்கு எதிர்ப்பு இருந்தால், அதற்கான திருத்தமொன்றைக் கொண்டு வந்து அதனை தோற்கடிக்க முடியும். இரண்டில் ஏதாவது ஒன்றைச் செய்தாக வேண்டும்.

நான் இதுகுறித்த யோசனைகளை எதிர்வரும் 8ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன். இதில் உங்களின் கருத்துக்களையும் 04 ஆம் திகதிக்கு முன்னர் என்னிடம் முன்வைத்தால், அவற்றையும் இணைத்துக் கொண்டு நாம் முன்நோக்கிச் செல்வோம்.

இந்த நாட்டைப் பிரிக்க நான் தயாராக இல்லை. நாம் எவரும் தயாரில்லை. இலங்கையில் உள்ள தமிழர்கள், முஸ்லிம்கள் மற்றும் பறங்கியர் உட்பட ஏனைய குழுக்களுடன் சிங்களவர்கள் இணைந்து வாழ வேண்டும். நமது தேசிய கீதத்தில் ஒரு தாயின் மக்கள் என்பதை நாம் பாதுகாத்தால், நம் நாடு ஒற்றுமையுடன் முன்னேற முடியும் என்பதில் எனக்கு எந்த சந்தேகமும் இல்லை. பொருளாதாரப் பிரச்சினை, அரசியல் பிரச்சினை என்பவற்றை நாம் அனைவரும் இணங்கும் வகையில் படிப்படியாக தீர்த்துக் கொள்ள முடியும். இந்தப் பிரச்சினைகளில் தங்கிவிடாது, பிரச்சினைகளைத் தீர்த்துக் கொண்டு முன்நோக்கிச் செல்வோம்.

நாம் யாரும் காட்டிக்கொடுக்கப் போவதில்லை. நாட்டைப் பிரிக்கப் போவதில்லை. நாம் அனைவரும் ஒன்றிணைந்துள்ளோம். இணைந்து பயணிப்போம்.” என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

வணக்கத்திற்குரிய அத்துரலிய ரத்தன தேரர், பிரதமர் தினேஷ் குணவர்தன, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச, மைத்திரிபால சிறிசேன, அமைச்சர்களான விஜயதாஸ ராஜபக்ச, பவித்ரா வன்னியாரச்சி, டக்ளஸ் தேவானந்தா, நாடாளுமன்ற உறுப்பினர்களான திஸ்ஸ விதாரண, குமார வெல்கம, ராஜித சேனாரத்ன, வஜிர அபேவர்தன, துமிந்த திஸாநாயக்க, மஹிந்தானந்த அளுத்கமகே, எம்.ஏ.சுமந்திரன், ரவூப் ஹக்கீம், சி.வி விக்னேஸ்வரன், சுரேன் ராகவன், சரத் வீரசேகர, சிவநேசத்துரை சந்திரகாந்தன், சாகர காரியவசம், டிரான் அலஸ், கெவிந்து குமாரதுங்க, ஏ.எல்.எம் அதாவுல்ல, ரிாத் பதியுதீன், இம்ரான் மஹ்ரூப் உள்ளிட்ட நாடாளுமன்ற கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சித் தலைவர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

இவ்வாறு அந்த ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.









இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A , கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 27.01.2023 இல் வெளியிடப்பெற்றது.